பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2051 கார்த்திகை 27 சனிக்கிழமை 12.12.2020 கதிர் 37

### இது ரகசியம் அல்ல!

சில தினங்களுக்கு முன்னர் அன்பர் ஒருவர் தொலைபேசி அழைப்பு எடுத்தார். *"இதுவரை இருந்த தேர்தல் ஆணையாளர்களின் பதவிக்காலம் கடந்த மாதம் 12 ஆம் திகதியுடன் முடிவடைகின்றது என்று நீங்கள் தானே செய்தி*

பக்கம்02 »

## யாழ்.குடாநாட்டில் சமூகத் தொற்றாக மாறுமா?

# மருதனார்மடத்தில் திடீர் சோதனையில் ஓட்டோ சாரதிக்குக் கொரோனா உறுதி!

### அவர் சந்தையில் கடை வைத்திருக்கின்றார் எனவும் தெரிவிப்பு

*யாழ்ப்பாணம், டிசெம்பர் 12*

*யாழ்ப்பாணம், மருதனார்மடம் பகுதியில் எழுமாற்றாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் ஒருவர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளார் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஆ.கேதீஸ்வரன் 'காலைக்கதிர்' பத்திரிகையிடம் தெரிவித்தார்.*

பக்கம் 02 »

## நாவலப்பிட்டி மாணவிக்கு கொரோனா

கம்பளை கல்வி வலயத்துக்கு உட்பட்ட நாவலப்பிட்டியில் மாணவி ஒருவருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ஹப்போட் தோட்டத்தைச் சேர்ந்த உயர்

பக்கம் 02 »

## கல்முனை பாடசாலை மாணவிக்கும் தொற்று

கல்முனை உவெஸ்லி உயர்தரக் கல்லூரியில் தரம் 9 இல் கல்வி பயிலும் நற்பிட்டிமுனையைச் சேர்ந்த மாணவி ஒருவருக்கு கொரோனா

பக்கம் 02 »

## ஆலய மணியின் கயிறு கழுத்தில் இறுகியதால் சிறுவன் பரிதாபச் சாவு

ஆலய மணியின் கயிறு கழுத்து பகுதியில் இறுகியதால் 7 வயது சிறுவனொருவர் பரிதாபகரமாக உயிரிழந்த சம்பவமொன்று டிக்கோயா, டங்கல் தோட்டத்தில் இடம்பெற்றுள்ளது.

டங்கல் தோட்டத்தின் மேல்பிரிவிலுள்ள ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய முற்றத்தில் குறித்த சிறுவன் விளையாடிக் கொண்டிருக்கையில் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் இத்துயரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது .

தரம் 2 இல் கல்வி பயிலும் விக்னேஸ்வரன் டிலுக்சன் என்ற 7 வயது சிறுவனே உயிரிழந்துள்ளார்.

பெற்றோர் வேலைக்கு சென்றிருந்தவேளை, இந்தச் சிறுவன் நேற்றுத் தனியாகவே இருந்துள்ளார் எனக் கூறப்படுகின்றது.

## முறையற்ற அபிவிருத்தித் திட்டங்களால் 39 தேசிய காடுகள் அழிவடையும் அபாயம்

இலங்கையில் மேற்கொள்ளப்படும் முறையற்ற அபிவிருத்திப் பணிகளால் சிங்கராஜ உட்பட 39 தேசிய அடர்ந்த காடுகள் அழிவுக்குட்படும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளன என்று சூழலியல் கற்கைகள் நிலையம் தெரிவித்துள்ளது.

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளைப் பொருட்படுத்தாமல் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகள் காரணமாகவே இந்த அபாயம் ஏற்பட்டுள்ளது எனவும் குறித்த நிலையம்

பக்கம் 11 »

## கொரோனாத் தொற்று சந்தேகத்தில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார் சமல்!

### 'பட்ஜட்' வாக்கெடுப்பிலும் பங்கேற்கவில்லை



ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரின் சகோதரரான அமைச்சர் சமல் ராஜபக்ஷ தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்.

அண்மையில் கொரோனா வைரஸ் தொற்று உறுதியாகிய விவசாய திணைக் களப் பணிப்பாளருடன்

பக்கம் 02 »

## ஹிட்லரின் வழியிலே பயணிக்கும் கோட்டா

### 'மொட்டு' கட்சியின் கிளையாக மாற்றப்பட்டுள்ளது மனித உரிமைகள் ஆணைக்குழு என்கிறார் முஜிபுர்

ஹிட்லரின் வழியிலேயே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசு பயணிக்கின்றது.

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் குற்றஞ்சாட்டினார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றுகையிலேயே அவர் இந்தக்

பக்கம் 02 »

## கிணற்றில் விழுந்த சிறுத்தை மீட்கப்பட்டது

கம்பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இலங்கவத்த பகுதியில் வீடொன்றின் கிணறொன்றிலிருந்து சிறுத்தைப்புலியொன்று நேற்று முற்பகல் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளது.

வீடொன்றின் பின்புறத்தில் உள்ள கிணற்றில் சுமார் 5 அடி நீளமான சிறுத்தைப்புலியொன்று விழுந்து கிடப்பதை வீட்டு உரிமையாளர்கள்

பக்கம் 02 »

## 'மொட்டு'வின் விசுவாசிகள் சுயாதீனமான குழுக்களில்!

### சஜித் அணி பகிரங்கக் குற்றச்சாட்டு

கோட்டாபய அரசின் ஆட்சியில் சுயாதீன ஆணைக்குழுக்கள் யாவும் அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளன. உயர் பதவிகளுக்கு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் ஆதரவாளர்களே நியமிக்கப்பட்டுள்ளனர். இதனால் ஜனநாயகமும் மக்களின் உரிமைகளும் கேள்விக் குறியாகியுள்ளன.

பக்கம் 02 »

## கொரோனா மரணம் 147 ஆக அதிகரிப்பு!

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை மேலும் அதிகரித்துள்ளது.

கொரோனாத் தொற்றால் இறுதியாக பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார் என்று நேற்று நள்ளிரவு அரசதகவல் திணைக்களம்

பக்கம் 02 »

## நேற்று மாத்திரம் 762 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று

இலங்கையில் நேற்று மாத்திரம் 762 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதன்படி கொரோனாவின் மூன்றாவது அலை மூலம் இதுவரையில் 27 ஆயிரத்து 747 பேருக்கு வைரஸ் தொற்றியுள்ளது.

நாட்டில் மொத்தத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 31 ஆயிரத்து 375 ஆக அதிகரித்துள்ளது.

இவர்களில் 22 ஆயிரத்து 831பேர் குணமடைந்துள்ளனர். 8 ஆயிரத்து 398 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

### வாழைச்சேனை பிரதேச சபையில் பிள்ளையான் குழு அட்டகாசம்

## எதிர்த்தரப்பினரின் போராட்டத்துக்கு மத்தியில் கதவுகள் உடைக்கப்பட்டு 'பட்ஜட்' நிறைவேற்றம்

### ஆளுங்கட்சி மட்டும் வாக்களிப்பு; செயலாளர் உட்பட பெண்கள் மூவர் வைத்தியசாலையில் சேர்ப்பு



பிள்ளையான் கட்சியின் ஆளுகைக்குட்பட்ட மட்டக்களப்பு, கோறளைப்பற்று (வாழைச்சேனை) பிரதேச சபையின் பாதீடு எதிர்த்தரப்பினரின் போராட்டத்துக்கு மத்தியில் எதிர்த்தரப்பினரின் வாக்குகள் இன்றி 11 வாக்குகளால் நேற்று நிறைவேற்றப்பட்டது.

இந்தப் பாதீடு தொடர்பான அமர்வில் ஏற்பட்ட

பக்கம் 11 »





## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
*வெளியிட்டீர்கள்"* – என்றார் அவர்.

நான் *"ஆமாம்"* என்றேன்.

*"ஆனால் அத்திகதிக்குப் பின்னர் பேராசிரியர் ரட்ணஜீவன் ஹூல் எழுதிய கட்டுரை ஒன்று உங்கள் பத்திரிகையின் மின்னிதழில் பார்த்தேன். அவரைத் தேர்தல் ஆணையாளர் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அது எப்படி? நீங்கள் கவனிக்கவில்லையா?"* – என்று கேட்டார்.

நான் அவருக்கு விளக்கம் கொடுத்தேன்.

*"நல்ல கேள்வி. அந்தத் திகதிக்குப் பின்னால்தான் அக்கட்டுரை வரையப்பட்டு எமக்குக் கிடைத்திருந்தது. அதில் அவர் 'தேர்தல் ஆணையர்' என்றே குறிப்பிடப்பட்டிருந்தது. அவரிடமே விசாரித்தேன். 'ஆம் நீங்கள் சொல்வது சரி. 19வது திருத்தத்தின் பிரகாரம் நாங்கள் மூவரும் தேர்தல் ஆணையாளர்களாக ஐந்து ஆண்டு காலத்துக்கு நியமிக்கப்பட்டோம். அதன்படி 2020 நவம்பர் 12 ஆம் திகதியுடன் எங்கள் பதவிக்காலம் முடிவடைகின்றது. ஆனால், அதற்கு முன்னர் 19ஆவது திருத்தத்தை அகற்றி அரசமைப்புக்கான இருபதாவது திருத்தம் வந்துவிட்டது. அதன்படி புதிய தேர்தல் ஆணையாளர்கள் நியமிக்கப்படும் வரை பழைய தேர்தல் ஆணையாளர்கள் பதவியில் தொடருவர் என்று உள்ளது என எனக்குச் சுட்டிக்காட்டினார் அவர். ஆக இப்போது புதிய தேர்தல் ஆணையம் பதவியேற்றுவிட்டது. அதன்படி இப்போது ரட்ணஜீவன் ஹூல் 'முன்னாள் தேர்தல் ஆணையாளர்' ஆகிவிட்டார்"* – என்று நான் கூறினேன்.

அறிந்து கொள்ள வேண்டிய நல்லதொரு தகவல்தான்.

★ ★ ★

இலங்கையில் பல விடயங்களில் முன்னோடிகள் நம் தமிழர்கள்தான்.

கடந்த முப்பது, நாற்பது ஆண்டுகளாக தமிழர்களின் இனப்பிரச்சினை விவகாரத்தை ஒட்டி போராட்ட சர்ச்சையைக் கிளப்பும் களமாகப் புலம் பெயர் தேசத்தைப் பயன்படுத்தும் நம்மவர்களின் தந்திரோபாயம் பலரையும் மலைக்க வைப்பது.

இலங்கை ஜனாதிபதி இலண்டனில் முற்கூட்டியே அறிவிக்கப்பட்ட ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொள்ள முடியாமல், ஓடித் தப்பி, விலகி, நாடு திரும்பச் செய்த அளவுக்கு புலம்பெயர் களங்களைச் சூடாகப் பேணும் சமயோசிதம் நம்மவர்களின் கைவந்த கலை.

இப்போது இந்த சாமர்த்தியத்தை, முஸ்லிம்களின் ஜனாஸாக்களை எரிக்கும் விடயத்துடன் ஒட்டிய சர்ச்சையில் பயன்படுத்தினால் என்ன முஸ்லிம் தரப்புகள் சிந்திப்பதாகத் தகவல்.

ஜனாஸா எரிப்பு விவகாரத்தில் கோட்டா அரசு திருந்தாது, அதற்கு எதிராக அரபு நாடுகள் ஊடாக இராஜதந்திர அழுத்தம் கொடுத்தால் மட்டும் போதாது, ஐரோப்பிய நாடுகளிலும் இலங்கையின் காட்டேரித்தனமான சட்ட நடவடிக்கைகளை அம்பலப்படுத்தி, கொழும்பின் முகத்திரையைக் கிழித்து, அதன் சின்னத்தனப் போக்கை உலகறியச் செய்ய வேண்டும். அதற்கு புலம்பெயர் தமிழர்களின் ஒத்துழைப்பையும் பெற்றுக்கொள்ள வேண்டும். – என்று சில முஸ்லிம் தரப்புகள் முஸ்தீபு செய்து களத்தில் இறங்கியிருக்கின்றன என்று கேள்வி.

பிரிட்டன், சுவிஸ் (ஜெனிவா), ஜேர்மனி, பிரான்ஸ் போன்ற இடங்களில் தமிழ்ப் பேசும் சமூகமாகக் களத்தில் இறங்குவது குறித்தும் சிந்திக்கப்படுகின்றதாம். முஸ்லிம்களிடம் இருந்து இப்படி உதவிக்கரம் நீட்டி முன்வைக்கப்படும் நேசக்கரத்தை புலம்பெயர் தமிழ் அமைப்புகள் எப்படிக் கையாளும் என்பது தெரியவில்லை.

எது, எப்படியென்றாலும் இன்னும் மூன்று மாதங்களில் – வரும் மார்ச்சில் – ஜெனிவாவில் நடைபெறும் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் கூட்டத்தொடர் தனக்குப் பெரும் தலையிடி தரப் போவதாக இருக்கும் எனக் கொழும்பு அதிகாரவர்க்கம் இப்போதே அஞ்சத் தொடங்கி விட்டது என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

தீர்க்கப்படாத தமிழர்களின் பிரச்சினைகள், முஸ்லிம்களின் ஜனாஸா எரிப்பு, மஹர சிறைக்கைதிகள் படுகொலை எனப் பல விடயங்களில் நெருக்குதல்கள் காத்திருக்கின்றன என்று அரசுத் தரப்பு முக்கியஸ்தர் ஒருவரே தெரிவித்தார்.

இலங்கை விவகாரத்தில் பிரிட்டன் ஏற்கனவே கறுவிக் கொண்டிருப்பதாகத் தகவல். அமெரிக்க ஆட்சி மாற்றத்துடன் இம்முறை ஜெனீவா அமர்வில் சனீஸ்வரன் கொழும்பின் தலையில் வந்து அமர்ந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்றும் ஜோஸியத்தில் அதிகம் நம்பிக்கையுள்ள ஆட்சித் தரப்புப் பிரமுகர் ஒருவர்.

பார்ப்போம், சனீஸ்வரன் எந்தப் பக்கம் அமருவார் என்று..!

– மின்னல் –

## மருதனார்மடத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
மருதனார்மடம் சந்தையில் கடை வைத்திருக்கும் குறித்த நபர் ஓட்டோ வைத்திருக்கின்றார் எனவும், ஓட்டோ சாரதிகளுக்கு நேற்று எழுமாற்றாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையிலேயே குறித்த நபர் அடையாளம் காணப்பட்டுள்ளார் எனவும் அவர் கூறினார்.

இதேவேளை, இன்று மருதனார்மடம் பகுதியில் மீளவும் பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இதேவேளை, நேற்றைய தொற்றாளர்கள் குறித்து யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி வெளியிட்டுள்ள அறிக்கையில் –

நேற்று யாழ். போதனா வைத்தியசாலை ஆய்வுகூடம் மற்றும் யாழ். மருத்துவபீட ஆய்வுகூடத்தில் 363 பேரின் மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அதில் மருதனார்மடத்தைச் சேர்ந்த ஒருவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது

அதேவேளை, வவுனியா தனிமைப்படுத்தல் நிலையத்தைச் சேர்ந்த இருவருக்கும் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

நேற்றுப் பரிசோதனை செய்யப்பட்டவர்களில் ஏனையவர்களுக்கு கொரோனாத் தொற்று இல்லை என உறுதிசெய்யப்பட்டுள்ளது – என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

மருதனார்மடம் பகுதியில் எழுமாற்றாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் ஒருவருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில், யாழ்ப்பாணம் மாவட்டத்திலும் கொரோனா சமூகத் தொற்றாக மாறிவிட்டதா என்ற அச்சம் இங்குள்ள மக்களிடத்தில் எழுந்துள்ளது.

## கல்முனை பாடசாலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அண்மையில் அக்கரைப்பற்றில் பணியாற்றும் நற்பிட்டிமுனையைச் சேர்ந்த ஓர் அரச உத்தியோகத்தர் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட சம்பவம் தெரிந்ததே. அவரது மகள்தான் தற்போது தொற்றுக்கு இலக்காகியுள்ளார் என்று சுகாதாரத்துறையினர் தெரிவித்தனர்.

கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் செ.புவனேந்திரன், கல்முனை உவெஸ்லி உயர்தரக் கல்லூரியின் அதிபர் செ.கலையரசன் ஆகியோர் மாணவியின் தொற்றை உறுதிப்படுத்தினர்.

சுகாதாரத்துறையினரின் ஆலோசனையைப் பெற்று பாடசாலை நடத்துவது தொடர்பில் தீர்மானிக்கப்படவுள்ளது எனவும் அவர்கள் கூறினார்கள்.

இதேவேளை, ஆயிரம் மாணவர் படிக்கும் கல்முனை உவெஸ்லி பாடசாலைக்கு நேற்று ஆக 36 மாணவர்களே வருகை தந்தனர் என்று அதிபர் தெரிவித்தார். அதுவும் தரம் 11 பரீட்சைக்கு 138 மாணவர்களுக்கு ஆக 36 மாணவர்கள் வருகை தந்துள்ளனர். இதேவேளை, அருகிலுள்ள கல்முனை பற்றிமா தேசிய கல்லூரிக்கு கடந்த சில தினங்களாக எந்த மாணவரும் பாடசாலைக்கு வரவில்லை எனத் தெரியவருகிறது. இவ்விதம் அங்கு பல பாடசாலைகள் வெறிச்சோடிக் காணப்படுகின்றன.

## ஹிட்லரின் வழி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
குற்றச்சாட்டை முன்வைத்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

இலங்கையில் மனித உரிமைகள் ஆணைக்குழு என்பது மிக முக்கிய நிறுவனமாகும். பாதிக்கப்படும் மக்களுக்கு நீதி நிவாரணத்தைப் பெற்றுக் கொடுக்கும் பணியை அது முன்னெடுக்க வேண்டும். பணம் செலவளித்து நீதிமன்றம் செல்ல முடியாதவர்கள் இங்கு வந்துதான் தமது குறைகளைக் கூறி தீர்வைப் பெறுவார்.

மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு மனித உரிமை விவகாரம் தொடர்பில் தெரிந்தவர்களே நியமிக்கப்பட வேண்டும். ஆனால், இந்த அரசு ஜகத் பாலசூரிய என்பவரை இலங்கையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தவிசாளராக நியமித்துள்ளது.

யார் இந்த ஜகத் பாலசூரிய? மஹிந்த ராஜபக்ஷ காலத்தில் அமைச்சராக இருந்தவர். ஆளுநர் பதவி வகித்தவர். 'மொட்டு' கட்சியின் கேகாலை மாவட்ட அமைப்பாளர். அவரின் மனைவி ஆளுநராகப் பதவி வகிக்கின்றார். மகன் தாரக பாலசூரிய அரசியல் இராஜாங்க அமைச்சராகப் பதவி வகிக்கின்றார்.

'மொட்டு' கட்சி உறுப்பினர் எவ்வாறு மனித உரிமை ஆணைக்குழுவின் தலைவராக நியமிக்க முடியும்? இது வெட்கம் கெட்ட செயலாகும். இந்தநிலையில், அரசுக்கு எதிராக எவ்வாறு முறைப்பாடுகளை முன்வைக்க முடியும்? அவ்வாறு முன்வைத்தாலும் எவ்வாறு நீதி கிடைக்கும்? முழு உலகமும் சிரிக்கின்றது. இவரின் நியமனத்தை எவ்வாறு நியாயப்படுத்துவது? ஆக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு என்பது 'மொட்டு' கட்சியின் கிளையாக மாற்றப்பட்டுள்ளது என்றே கூறவேண்டும் – என்றார்.

## கொரோனாத் தொற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
இவர் நெருக்கமாக இருந்துள்ளார் என்று கூறப்படுகின்றது.

இதன் காரணமாக அமைச்சர் சமல் தற்போது தனிமைப்படுத்தலில் உள்ளார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனாலேயே அவர் நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் நடைபெற்ற வரவு – செலவுத் திட்டம் மீதான வாக்கெடுப்பிலும் கலந்துகொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## கொரோனா மரணம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
அறிவித்துள்ளது.

இதன்படி, இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 147ஆக அதிகரித்துள்ளது.

கொழும்பு – 13 ஐச் சேர்ந்த 82 வயதான பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த குறித்த பெண், கொரோனாத் தொற்றுக்குள்ளாகிய நிலையில், முல்லேரியா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

முல்லேரியா வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த குறித்த பெண், நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார் என்று அரச தகவல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

இரத்த அழுத்தம், நியூமோனியாவுடனான கொரோனாத் தொற்றே இந்த உயிரிழப்புக்கான காரணம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## நாவலப்பிட்டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
தரத்தில் கல்வி பயின்று வரும் மாணவி ஒருவருக்கே தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மாணவியின் தந்தை ஏற்கனவே தொற்றுக்குள்ளாகியுள்ள நிலையில், அவரது குடும்பம் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தநிலையில், குடும்பத்தவர்களுக்கு மேற்கொண்ட பி.சி.ஆர். பரிசோதனையிலேயே மேற்படி மாணவிக்கு தொற்று இருப்பது உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இதையடுத்து அந்த மாணவி கற்கும் பாடசாலையின் 4 ஆசிரியர்களும், 9 மாணவர்களும் மற்றும் அவர்களின் குடும்பத்தாரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

## கிணற்றில் விழுந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
கண்டுள்ளனர். இது தொடர்பில் நுவரெலியா வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளுக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

இதனையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள், கிணற்றுக்குள் பொறியொன்றை இறக்கிப் பாதுகாப்பான முறையில் சிறுத்தைப்புலியை மீட்டு, வாகனமொன்றில் எடுத்துச் சென்றனர்.

சிகிச்சைகளுக்கு பின்னர் சிறுத்தைப் புலி விடுவிக்கப்படும் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

## 'மொட்டு'வின் விசுவாசி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
இனி கடவுள் தான் காப்பாற்ற வேண்டும்.
– இவ்வாறு

ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் சுயாதீன ஆணைக்குழுக்கள் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்

அவர் மேலும் தெரிவித்ததாவது

நல்லாட்சியின் போது சுயாதீன ஆணைக்குழுக்களின் சுயாதீனம் பாதுகாக்கப்பட்டது. அரச ஊழியர்கள்கூட அரசின் செயற்பாடுகளை விமர்சிக்கக் கூடிய சுதந்திரம் இருந்தது. இதனால் நாட்டுக்குப் பல நன்மைகள் ஏற்பட்டன. ஆனால், இன்று சுயாதீன ஆணைக்குழுக்கள் முழுமையாக அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளன.

தேர்தல் காலத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பாதுகாப்புப் பிரிவுக்கு தலைமை வகித்து, பொதுஜன முன்னணியின் அலுவலகத்தில் இருந்து தேர்தலை வழிநடத்திய நபரே தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் தவிசாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

பஸில் ராஜபக்ஷவின் பல சித்தாந்தங்கள் நடைமுறைப்படுத்தப்படும் என பதவியேற்பு நிகழ்வில் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் தவிசாளர் உரையாற்றியுள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி சார்பில் தேர்தலில் போட்டியிட்ட ஒருவரும் தேசிய பொலிஸ் ஆணைக்குழு உறுப்பினராக இருக்கின்றார். இவ்வாறானவர்களிடம் எவ்வாறு சுயாதீனத்தன்மையை எதிர்பார்ப்பது?

அதேபோல் சுயாதீன அரச சேவைகள் ஆணைக்குழுவுக்கும் வியாபாரிகள் இருவர் நியமிக்கப்பட்டுள்ளனர். விலைமனுகோரல்களின்போது அரச அதிகாரிகள், இவர்களுக்கு அடிபணிய வேண்டிய நிலை ஏற்படும்.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளராகவும் பக்கச்சார்பாகச் செயற்படும் ஒருவரே நியமிக்கப்பட்டுள்ளார்

ஒரு புறத்தில் இராணுவ நியமனங்கள், மறுபுறத்தில் சுயாதீன ஆணைக்குழுக்களின் உயர் பதவிகளுக்கும், ஏனைய நியமனங்களுக்கும் அரசின் விசுவாசிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

எதிர்க்கட்சித் தலைவரை சஜித் பிரேமதாஸவும், கபீர் ஹாசீமும் மேற்படி நியமனங்களை நாடாளுமன்றப் பேரவையில் எதிர்த்தனர். இவ்வாறான ஆணைக்குழுக்களின் கீழ்தான் எதிர்காலத்தில் தேர்தலைச் சந்திக்க வேண்டிய நிலை வரும்.

இலங்கையில் இன்று ஏகாதிபத்திய ஆட்சி நடைபெறுகின்றது என்பதற்குச் சான்றாக, பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுக்களின் உறுப்பினர்களும் அழுத்தங்கள் மூலம் பதவி துறக்கவைக்கப்பட்டுள்ளனர்.

ஒரு புறத்தில் இராணுவ நியமனம், மறுபுறத்தில் அரசியல் நியமனம் என அரசின் பயணம் அமைவதால் மக்களின் ஜனநாயகம், உரிமைகள் எல்லாம் கேள்விக்குறியாகியுள்ளன. கடவுள்தான் இனி நாட்டு மக்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற நிலை உருவாகியுள்ளது – என்றார்.

# தேர்தலுக்காக வரவு – செலவு தயாரிக்கப்படவில்லை மக்களுக்கு ஒருபோதும் மோசடி செய்ய மாட்டோம்!

## பிரதமர் மஹிந்த சபையில் திட்டவட்டம்

தேர்தலை எதிர்பார்த்து எந்தவொரு விடயமும் இந்த வரவு – செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை. நாம் அந்த மோசடி செயலை மக்களுக்கு செய்ய மாட்டோம் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கடந்த (வியாழக்கிழமை) நாடாளுமன்றத்தில் நடைபெற்ற வரவு – செலவுத் திட்டத்தின் மூன்றாவது வாசிப்பு மீதான விவாதத்தின்போது, பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்த விவாதத்தில் அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு:–

இந்த வரவு – செலவுத் திட்டத்தை நாம் முன்வைக்கும் போது 70 பில்லியன் ரூபாவை கொரோனா தொற்றுக்கென செலவிட்டிருந்தோம்.

வரவு – செலவுத் திட்டத்தின் மூன்றாவது வாசிப்பு இடம்பெறும் இன்றைய நாளலவில் நாம் 82 பில்லியன் ரூபாவை கொவிட் ஒழிப்பிற்காகச் செலவிட்டுள்ளோம். டிசெம்பராகும் போது அது 90 பில்லியனை விட அதிகமாகும். அதனால் இது போன்ற பாரிய சவால்களை ஏற்றுக்கொண்டு முன்வைக்கப்படும் வரவு – செலவுத் திட்டமாக இதனைக் குறிப்பிட வேண்டும்.

நாம் உலகத்துடன் எந்தளவுக்கு பிணைக்கப்பட்டுள்ளோம் என்பதை உணர சரியான தருணம் தான் இது. உலகில் இடம்பெறும் விடயங்கள் – அரசியல், பொருளாதாரம், சுகாதார அடிப்படையில் இடம்பெறும் விடயங்கள் – எம்மை எந்தளவு பாதிக்கும் என்பதை புரிந்துக் கொள்ளக்கூடிய சந்தர்ப்பம் இதுவாகும்.



உலகில் இடம்பெறும் விடயங்கள் இந்த சபையைக் கூட கடுமையாகப் பாதிக்கும் என நான் கூற வேண்டும். இதுபோன்ற உலக நெருக்கடிகளின்போது வெளி உலகத்தைச் சார்ந்துள்ள நாடுகள் உதவியற்ற நிலைக்குத் தள்ளப்படுகின்றன.

நாம் நமது பொருளாதாரத்தை தேசிய மட்டத்தில் கட்டியெழுப்பியிருந்தால் இதுபோன்ற நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்கக் கூடியதாயிருந்திருக்கும். அதுதான் கொவிட் – 19 எமக்குக் கற்பித்த பாடம். நாம் ஏற்கனவே இந்நிலையை புரிந்துக் கொண்டிருந்தோம்.

அதனாலேயே 'சுபீட்சத்தின் நோக்கு' தேசிய பொருளாதாரம் தொடர்பாகவும், தேசிய விவசாய வளர்ச்சி தொடர்பிலும் எண்ணினோம். இந்த வரவு – செலவுத் திட்டம் சுபீட்சத்தின் நோக்கு கொள்கைத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டதாகும்.

மற்றைய வரவு – செலவுத் திட்டங்களில் காணப்பட்ட நோக்கமல்ல இந்த வரவு – செலவுத் திட்டத்தில் காணப்படுவது. மற்றைய வரவு – செலவுத் திட்டங்களின் வரவு – செலவுத் திட்ட பற்றாக்குறையை ஈடுசெய்வதே முதன்மையாகும். எனினும் இந்த வரவு –செலவுத் திட்டம் உள்ளூர் விவசாயிகள், உள்ளூர் தொழிலதிபர்கள், உள்ளூர் உற்பத்தியாளர்கள் ஆகியோரை மேம்படுத்தி, உலகை எதிர்கொள்ளக்கூடிய மற்றும் இதுபோன்ற பாதிப்புகளுக்கு முகங்கொடுக்கக் கூடிய நாட்டைக் கட்டியெழுப்புவதற்காகவே முழுமையாக ஒதுக்கப்பட்டுள்ளது.

சுபீட்சத்தின் நோக்கில் விவசாயத்துறை தொடர்பாக விசேட கவனம் செலுத்தியுள்ளோம். நமக்கான உணவை நாமே உற்பத்தி செய்வது நமது நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான சிறந்த வழியாகும். இவ்வளவு காலமும் ஒரு கிலோகிராம் நெல்லுக்கு 32 ரூபாவே செலுத்தப்பட்டது. நாம் அதனை 50 ரூபா வரை அதிகரித்தோம். உரத்தை இலவசமாக நிவாரணமாக பெற்றுக் கொடுத்தோம். இவ்வாறு செய்ததன் ஊடாக விவசாயிகளின் வருமானம் இரட்டிப்பானது.

இந்த வரவு – செலவுத் திட்டத்தில் பொதுமக்களுக்கு எவ்வித நன்மையும் இல்லை என எமது விமர்சகர்கள் குற்றஞ்சாட்டினர். எனினும், நாம் ஒருபோதும் வெறுமனே பணத்தைச் செலவிடும் திட்டங்களை ஆரம்பிக்கவில்லை என்பதை நினைவில் கொள்ளுங்கள். எதிர்வரும் தேர்தலை எதிர்பார்த்து எந்தவொரு விடயமும் இந்த வரவு – செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை. நாம் அந்த மோசடி செயலை மக்களுக்கு செய்ய மாட்டோம். – என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# தேசியப் பாதுகாப்புப் பற்றிப் பேசும் அரசால் சிறைக் கைதிகளைக் காக்க முடியவில்லை!

## ருவன் விஜேவர்தன கிண்டல்



தேசியப் பாதுகாப்பைப் பற்றி பேசிக் கொண்டிருக்கும் அரசாங்கத்துக்கு தனது ஆட்சியில் சிறைச்சாலைக்குள் முன்னெடுக்கப்படும் சர்வதேச சதித்திட்டத்தை கட்டுப்படுத்த முடியாமலுள்ளமை கேலிக்குரியதாகும் என ஐக்கிய தேசிய கட்சியின் பிரதித் தலைவர் ருவன் விஜேவர்தன தெரிவித்தார்.

புத்தளத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற பொது மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் ,

அரசாங்கம் பதவியேற்று ஓராண்டு நிறைவடைந்துள்ள நிலையில் பாரிய நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ளது. ஐக்கிய தேசிய கட்சியை மீளக் கட்டியெழுப்பி மீண்டும் ஐ.தே.க. ஆட்சியமைக்க வேண்டும் என்பது கட்சி ஆதரவாளர்களின் எதிர்பார்ப்பாகவுள்ளது.

இந்நிலையில் தற்போதுள்ள அமைச்சர்கள் சிலர் நாட்டுக்கு எதிராக மஹர சிறைச்சாலைக்குள் சர்வதேச சதிதிட்டம் முன்னெடுக்கப்படுகின்றன எனக் கூறுகின்றனர். தேசிய பாதுகாப்பைப் பற்றி பேசும் இந்த அரசாங்கம் தமது ஆட்சியில் சிறைச்சாலைக்குள் முன்னெடுக்கப்படும் சர்வதேச சதித்திட்டத்தை கட்டுப்படுத்த முடியாத நிலையிலுள்ளது.

இது மிகவும் கேலிக்குரியதாகும். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுபவர்களை சுட்டுக் கொலை செய்கின்றனர். மஹர சிறைச்சாலையில் இடம்பெற்றமையைப் போன்று வெலிக்கடை சிறைச்சாலையிலும் 20 இற்கும் மேற்பட்டோர் இவ்வாறு கொல்லப்பட்டுள்ளனர்.

இவ்வாறான அரசாங்கத்தைத் தோற்கடிப்பதற்கு நாம் தயாராக வேண்டும். எதிர்காலத்தில் நாடு முகங்கொடுக்கும் சவால்களுக்கு ஐக்கிய தேசிய கட்சியால் மாத்திரமே தீர்வு வழங்க முடியும். நாட்டில் காணப்படும் பொருளாதார பிரச்சினைகளுக்கு ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் மாத்திரமே தீர்வு உள்ளது.

# தனிமைப்படுத்தல் பிரதேசங்கள் எண்ணிக்கை மேலும் அதிகரிப்பு!

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக நாட்டின் 7 மாவட்டங்களிலுள்ள 51 பிரதேசங்கள் தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளாக அறிவிக்கப்பட்டுள்ளன.

கொரோனா தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையம் இந்த தகவலை வெளியிட்டுள்ளது.

கொழும்பு மாவட்டத்தில் 18 பிரதேசங்களும், கம்பஹா மாவட்டத்தில் 11 பிரதேசங்களும், களுத்துறை மாவட்டத்தில் 7 பிரதேசங்களுமாக மேல் மாகாணத்தில் 35 பிரதேசங்கள் தற்போது தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

அத்துடன், கண்டி மாவட்டத்தில் 4 பிரதேசங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளமையுடன், புத்தளம் மாவட்டத்தில் 5 பிரதேசங்களும், அம்பாறை மாவட்டத்தில் ஒரு பிரதேசமும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.

# உயிரிழந்த டச்சு தேரரின் உடலிலிருந்து மாதிரிகள்!

உயிரிழந்த நிலையில் ரத்கம மீட்கப்பட்ட டச்சு நாட்டு துறவியின் உடலிலிருந்து மாதிரிகள் எடுக்கப்பட்டுள்ளன என பிரதிப் பொலிஸ் மா அதிபரும், பொலிஸ் ஊடகப் பேச்சாளருமான அஜித் றோஹண தெரிவித்துள்ளார்.

கரபிட்டிய போதனா வைத்தியசாலையின் நீதித்துறை மருத்துவ அதிகாரிக்கு தேரரின் எச்சங்கள் தொடர்பாகப் பிரேத பரிசோதனை நடத்துமாறு நீதிவான் உத்தரவிட்ட நிலையிலேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பாக குற்றப் புலனாய்வுப் பிரிவினரும் ரத்கம பொலிஸாரும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

துறவி காணாமல் போனார் என அளிக்கப்பட்ட முறைப்பாடுகளுக்கு அமைய துறவி கடந்த செவ்வாய்க்கிழமை ரத்கம பகுதியில் அமைந்துள்ள களப்பொன்றில் கைகள் மற்றும் கால்கள் கட்டப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

தேரரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக காலி, கராபிட்டிய வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

59 வயதான துறவி நெதர்லாந்தில் இருந்து 2011 இல் இலங்கைக்கு வந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# குருகுலம் தமிழ் மொழி ஒளிபரப்பு அட்டவணை

| 12.12.2020 | சனிக்கிழமை |
| --- | --- |
| 04.00 - 04.55 | தரம் - 12 தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் |
| 05.00 - 05.55 | தரம் - 13 தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் |
| 06.00 - 06.55 | தரம் - 12 உயிரியல் |
| 08.00 - 08.55 | தரம் - 10 தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் |
| 09.00 - 09.55 | தரம் - 11 தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் |
| 10.00 - 10.55 | தரம் - 10 தமிழ் |
| 11.00 - 11.55 | தரம் - 11 தமிழ் |
| 12.00 - 12.55 | தரம் - 12 இரசாயனவியல் |
| 13.00 - 13.55 | தரம் - 13 இரசாயனவியல் |
| 14.00 - 14.25 | தரம் - 06 தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் (1ஆம், 2ஆம்)<br>தரம் - 07 தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் (2ஆம், 4ஆம்) |
| 14.30 - 15.55 | தரம் - 08 தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் (1ஆம், 3ஆம்)<br>தரம் - 09 தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் (2ஆம், 4ஆம்) |
| 15.00 - 15.55 | தரம் - 12 தமிழ் |
| 16.00 - 16.55 | தரம் - 13 தமிழ் |
| 17.00 - 17.55 | தரம் - 13 உயிரியல் |
| 18.00 - 18.55 | தரம் - 08 ஆங்கிலம் (1ஆம், 3ஆம்)<br>தரம் - 09 ஆங்கிலம் (2ஆம், 4ஆம்) |
| 22.30 - 23.25 | தரம் - 12 பொறியியல் தொழிநுட்பம் |
| 23.30 - 24.30 | தரம் - 13 பொறியியல் தொழிநுட்பம் |

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com


## தேர்தலுக்கு வழி செய்யுங்கள்!

மாகாண சபைத் தேர்தல்களை விரைவில் நடத்துவது தொடர்பாகக் கவனம் செலுத்தி, அதற்கான சட்ட நடவடிக்கைகள் தொடர்பாக ஆராயுமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ புதிய தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர்களிடம் தெரிவித்தார் என்று பிரதமரின் ஊடகப் பிரிவு வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிதாகப் பொறுப்பேற்றிருக்கும் தேர்தல்கள் ஆணையாளர்கள், பிரதமரைச் சந்தித்தபோது அவர் இவ்வாறு தெரிவித்தார் என்று அந்தச்செய்திக் குறிப்பில் கூறப்பட்டது.

உண்மையில் பிரதமரிடமும் அவரின் அரசிடமும், ஜனாதிபதியிடமும் தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர்கள் கூற வேண்டிய விடயத்தை, மாறி தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்களிடம் பிரதமர் கூறியிருக்கின்றார் என்றே தோன்றுகின்றது.

தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு புதிய ஆணையாளர்கள் நியமிக்கப்பட்டிருக்கலாம். ஆனால், ஆணையாளர்கள் புதியவர்களோ, பழையவர்களோ, ஆணைக்குழு தொடர்ந்து, இடையீடின்றி இயங்கிக் கொண்டுதான் இருக்கின்றது.

ஆணையாளர்கள் மாறலாம், ஆனால் ஆணையம் சட்ட ரீதியாகத் தொடர்ந்து இயங்குகின்றது. இயங்குகின்றமை மட்டுமல்லாமல், அச்சமயங்களில் பதவியில் இருக்கும் ஜனாதிபதி, பிரதமர், அவர்களின் அரசு போன்ற தரப்போடு தொடர்ந்து ஊடாடிக் கொண்டு தான் இருக்கின்றது.

மக்களின் இறைமையை வெளிப்படுத்துகின்ற வாக்குரிமையை தவறாது – காலம் பிந்தாமல் – காலத்தை இழுத்தடித்து அந்த உரிமயை மறுக்காமல் – அதை அவர்கள் பிரயோகிப்பதற்கான வாய்ப்பை வழங்குங்கள், அதற்கு இடமளியுங்கள் என்று தேர்தல் ஆணையம் சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு தொடர்ந்து தெளிவாயும், திட்டவட்டமாயும் அழுத்தம் கொடுத்தே வந்துள்ளது.

இப்போது தமது பதவி காலாவதியான தேர்தல் ஆணையாளர்கள் மூவரும் கூட இது விடயத்தில் தமது பொறுப்பை – கடமையை – நேர்மைத் திறனுடன் செய்திருக்கின்றார்கள் என்றே கூற வேண்டும்.

மாகாண சபைகளின் பதவிக் காலம் முடிவடைந்து தேர்தல் நடத்த வேண்டிய வேளை வந்த நாள் தொட்டு, முன்னர் ஜனாதிபதியாக இருந்த மைத்திரிபால சிறிசேனாவையும், பிரதமராக இருந்த ரணில் விக்ரமசிங்கவையும், பலதடவைகள் சந்தித்தும், கடிதம் மூலமும் அந்த ஆணையம் அத்தேர்தலை நடத்துவதற்கான சட்டத்தை யாக்கும்படி தொடர்ந்து வலியுறுத்தி வந்திருக்கின்றது.

ஏன் கடந்த ஆண்டின் ஜனாதிபதியாக கோட்டாபய ராஜபக்ஷ பதவியேற்ற பின்னரும் கூட இத்தகைய வற்புறுத்தலைத் தேர்தல் ஆணையம் முன்வைக்கத் தவறவில்லை.

இப்போதும் கூட – நேற்றும் – புதிய தேர்தல் ஆணையாளர்கள் அதனைத்தான் தற்போதைய அரசின் பிரதமரிடமும் முன்வைத்து வலியுறுத்தியிருக்கிறார்கள். அது அவர்களின் கடமை.

மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்காக இருந்த சட்டங்களை நாடாளுமன்றத்தில் வாபஸ் பெற வைத்து, தேர்தல் நடத்துவதற்கும் தேவையான சட்டங்களின் விடயத்தில் வெற்றிடத்தை ஏற்படுத்தி வைத்திருக்கிறது பிரதமர் ரணிலின் நல்லாட்சி அரசு. மாகாணசபைத் தேர்தலை நடத்தினால் பெருந்தோல்வி கிட்டிவிடும் என்று கருதிய – தேர்தல் விவகாரத்தில் 'தொடை நடுங்கி' ஆட்சிப் பீடமான – ரணிலின் நல்லாட்சி அரசு, அத்தேர்தலை நடத்துவதற்கான சட்டங்களை சூனியமாக்கிவிட்டு, புதுச்சட்டங்களை ஏற்படுத்தாமல் காலத்தை இழுத்தடித்துக் கடத்தி வந்தது.

அந்த அரசு கவிழ்ந்து சுமார் ஒரு வருடமாகின்றது. ராஜபக்ஷக்களின் புதிய அரசும் கூட அதைச் செய்யாமல் காலத்தைக் கடத்துகின்றது. பொதுத் தேர்தல், கொவிட் பிரச்சினைகள் போன்றவற்றைக் காரணம் காட்டி அது தப்ப முயற்சிக்கின்றது.

கொவிட் பரம்பல் பற்றிய உச்சபட்ச ஆபத்து எச்சரிக்கை விடுக்கப்பட்டிருக்கையில் அதற்கு மத்தியில் பொதுத் தேர்தலை நடத்தி முடிக்கத் துடியாய்த் துடித்த ராஜபக்ஷக்களின் அரசுக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்துவது அற்ப விடயம்.

அதற்கு மனம் இருந்தால்தானே இடமுண்டு!

அரசு நினைத்தால் ஒரு வரியில் ஒரு சட்ட மூலத்தை – பழைய மாகாணசபைத் தேர்தல் சட்டம் மீண்டும் நடைமுறைக்கு வருகின்றது என்பதைக் குறிக்கும் ஒரு சட்டமூலத்தை – சாதாரண பெரும்பான்மையுடன் நிறைவேற்றுவதன் வாயிலாக அடுத்த இரண்டு வாரங்களுக்குள் மாகாணசபைத் தேர்தல்கள் பற்றிய உத்தியோக பூர்வ அறிவிப்பை வெளியிடுவதற்கு வழி செய்யலாம்.

ஜனாதிபதித் தேர்தல், பொதுத்தேர்தல், சர்வஜன வாக்கெடுப்பு ஆகியவை போன்று மாகாணசபைத் தேர்தலும் கூட மக்களின் இறைமையை வெளிப்படுத்தும் ஓர் அங்கம்தான், அதை மறுப்பது மக்களின் இறைமையை மறுப்பதற்கு ஒப்பானது என உயர்நீதிமன்றம் தனது தீர்ப்பு ஒன்றில் குறிப்பிட்டுள்ளது.

மாகாணசபைத் தேர்தல் நடத்தும் பொறுப்புத் தொடர்பான பந்தை நாசூக்காகத் தேர்தல் ஆணையத்தின் களத்துக்குள் அடித்துவிடும் தமது தந்திரோபாயத்தை பிரதமர் கைவிட்டு, தாமே முன்வந்து – தமது அரசு மூலம் – அத்தேர்தலை நடத்துவதற்கான சட்டத்தை மூலத்தை உடனடியாக நாடாளுமன்றில் நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கவேண்டும்.

## கைதிகளின் போராட்டம் வன்முறையாக மாறியதற்கான காரணம் வெளியானது!

கொழும்பு, நவ.12

மஹர சிறைச்சாலையில் கொரோனா வைரஸ் தொற்று ஏற்படுவதிலிருந்து தப்பிக்க கைதிகள் ஆரம்பித்த போராட்டத்தை, பாதாள உலகக் குழுக்களின் உறுப்பினர்கள் சிலரே வன்முறையாக மாற்றியுள்ளனர் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

மஹர சிறைச்சாலை விவகாரம் தொடர்பாக விசாரணை நடத்திய ஐந்து பேர் கொண்ட குழுவே இதனைத் தெரிவித்துள்ளது.

இந்தக் குழுவின் அறிக்கையை நீதிய மைச்சர் நாடாளுமன்றில் தாக்கல் செய்திருந்தார்.

அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு –

சில கும்பல் தலைவர்கள் ஒருவருக்கொருவர் பழிவாங்க முயன்றமையால், கைதிகள் நடத்திய ஆர்ப்பாட்டம் வன்முறைக்குத் திரும்பியுள்ளது.

மேலும், கைதிகள் யாரும் துப்பாக்கிகள் ஏதும் வைத்திருக்கவில்லை. அதிகாரிகள் மற்றும் நிலைமையைத் தணிக்க வந்தவர்கள் மாத்திரமே துப்பாக்கிகளை வைத்திருந்தனர்.

இருப்பினும், வாயிலுக்கு அருகில் மரக் கட்டைகள், இரும்புக் கம்பிகள் மற்றும் கற்கள் இருக்கின்றமையை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

இதேவேளை சில கைதிகள், பல வகையான மாத்திரைகளைத் திருடி அவற்றை உட்கொண்டுள்ளமை விசாரணையில் கண்டறியப்பட்டுள்ளது.

மேலும், சிறை வளாகத்தில் இருந்த முக்கியமான ஆவணங்களைக் கைதிகள் எரித்துள்ளனர்.

அத்துடன் விளக்கமறியலில் கைதிகள் வைக்கப்பட்டுள்ள பகுதி தவிர, வளாகத்தில் உள்ள அனைத்து கட்டடங்களும் சாம்பலாக எரிக்கப்பட்டுள்ளன.

கொரோனா வைரஸ் தொற்று நேர்மறையாகக் கண்டறியப்பட்டவர்களைப் பிரிக்கவும், மற்றையவர்களை சுய தனிமைப்படுத்தலில் அந்தந்த வீடுகளுக்கு அனுப்ப நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என அறிக்கையில் குறித்த குழு பரிந்துரைத்துள்ளது.

## மஹர சிறைக் கைதிகள் போராட்டம் நியாயமானது

### இடைக்கால விசாரணை அறிக்கை தெரிவிக்கின்றது என்கிறார் சஜித்



மஹர சிறைச்சாலையில் கைதிகள் மேற்கொண்ட ஆர்ப்பாட்டம் நியாயப்படுத்தக்கூடியது எனச் சிறைச்சாலை கலவரம் குறித்து வெளியாகியுள்ள இடைக்கால விசாரணை அறிக்கை தெரிவிக்கின்றது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

சிறைச்சாலையில் உள்வாங்கப்படக்கூடிய கைதிகளை விட மூன்று மடங்கு அதிகமானவர்கள் அங்கு காணப்பட்டனர் என அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தங்களைப் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்துமாறும், கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ள கைதிகளை அங்கிருந்து வெளியேற்றுமாறும், தரமான உணவுகளை வழங்குமாறும் கைதிகள் வேண்டுகோள் விடுத்து ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர் என அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறையில் காணப்பட்ட நெரிசல் மற்றும் கொரோனா வைரஸ் தொற்று காரணமாக ஆர்ப்பாட்டம் நியாயப்படுத்தக்கூடியது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மஹர சிறையில் மனித உரிமை மீறப்பட்டது என இடைக்கால விசாரணை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்குக் காரணமானவர்களை நீதியின் முன் நிறுத்த வேண்டும் – என்றார்.

## ஜெமினிட்ஸ் விண்கல் பொழிவை இலங்கையர்கள் காணும் வாய்ப்பு!

ஜெமினிட்ஸ் விண்கல் பொழிவை நாளை இலங்கையர்கள் காண முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு பல்கலைக்கழக இயற்பியல் துறையின் வானியல் மற்றும் விண்வெளி அறிவியல் பிரிவின் தலைவர் பேராசிரியர் சந்தன ஜயரத்ன இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்போது கருத்து வெளியிட்டுள்ள அவர்:-

எதிர்வரும் 13 –14 ஆம் திகதிகளில் வருடாந்திர விண்கல் பொழிவு நிகழ்கிறது. அதிகாலை வரை நிலவு ஒளி இல்லாததால் இந்த ஆண்டு அதிக விண்கற்களைக் காணலாம்.

நகர ஒளி மாசுபாடு இல்லாமல் வானம் தெளிவாகவும், இருட்டாகவும் இருந்தால், ஒரு மணி நேரத்திற்கு 120 விண்கற்கள் அல்லது நிமிடத்திற்கு ஒன்று அல்லது இரண்டு விண்கற்கள் காணப்படலாம்.

இரவு 9 மணிக்குப் பிறகு கிழக்கு நோக்கி விண்கற்களை இலங்கையர்கள் காணலாம். 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை , நள்ளிரவில் மற்றும் 14 ஆம் திகதி திங்கட்கிழமை சூரிய உதயத்துக்கு முன் விண்கல் பொழிவை காண முடியும்.

14 ஆம் திகதி திங்களன்று அதிகாலை 2 மணி முதல் அதிகாலை 4.30 மணி வரை சூரிய உதயத்துக்கு முந்தைய இருண்ட நேரங்களில் இதைப் பார்ப்பதற்கான சிறந்த நேரம் இருக்கும். ஏனெனில் மழையின் கதிரியக்க புள்ளி வானத்தில் மிக அதிகமாக உள்ளது மற்றும் உச்சச் செயல்பாடு ஏற்படுகிறது.

இந்த விண்கல் மழை வெள்ளை, மஞ்சள், பச்சை, நீலம் மற்றும் சிவப்பு போன்ற பல வண்ணங்களில் காணப்படும் விளக்குகளின் தடத்துடன் பல வண்ண காட்சிக்கு பிரபலமானது.

இந்த நட்சத்திரங்கள் ஜெமினி என்ற நட்சத்திர விண்மீன் திசையிலிருந்து வருவதாகத் தெரிகிறது, எனவே இதற்கு ஜெமினிட் என்று பெயரிடப்பட்டுள்ளது. – எனக் குறிப்பிட்டுள்ளார்.

## கொரோனாவுக்கு சிகிச்சைபெறும் அரச ஊழியருக்கு அக்ரஹார!

கொரோனா அச்சம் காரணமாக வைத் தியசாலைகளில் சிகிச்சை பெற்று வரும் அரச ஊழியர்களுக்கு பணம் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதன்படி அக்ரஹார காப்புறுதியில் இவர்களுக்கு நாளொன்றுக்கு 3 ஆயிரம் ரூபா என்ற அடிப்படையில் 10 நாள்களுக்கு வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ள தாக கூறப்பட்டுள்ளது.

அதேபோல் கொரோனா தொற்றால் உயிரிழக்கும் அரச ஊழியர்களுக்கு 7 லட்சம் ரூபா பணம் வழங்க தீர்மானிக் கப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

# நாட்டில் விளையாட்டுத்துறை ஊடாக பொருளாதாரம் கட்டியெழுப்பப்படும்!

## பஸில் ராஜபக்ஷ நம்பிக்கை



விளையாட்டு துறையை மேம்படுத்தி அதனூடாகப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கான வேலைத்திட்டங்களை மேற்கொள்ள எதிர்பார்ப்பதாக பொருளாதார புத்தெழுச்சி மற்றும் வறுமை ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணியின் தலைவர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பிரதேச, மாவட்ட மற்றும் மாகாண மட்டத்தில் விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அதிகாரிகளுடன் கடந்த (வியாழக்கிழமை) அலரி மாளிகையில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன்போது, பஸில் ராஜபக்ஷ மேலும் கூறியுள்ளவை வருமாறு:-

இளைஞர், யுவதிகளின் விளையாட்டுத் திறனை மேம்படுத்தி விளையாட்டு பொருளாதாரத்தை ஏற்படுத்துவதற்கு சுபீட்சத்தின் நோக்கு கொள்கைத் திட்டத்தினூடாக எதிர்பார்க்கின்றோம்.

அதனூடாக நாட்டின் பொருளாதாரத்துக்குப் பெரும் பங்களிப்பை பெற்றுக் கொடுப்பதற்கு எதிர்பார்க்கின்றோம்.

இம்முறை வரவு - செலவுத் திட்டத்தில் இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறைக்கென 8 ஆயிரத்து 264 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

வரவுசெலவுத்திட்ட வரலாற்றில் இளைஞர், விவகார மற்றும் விளையாட்டுத்துறைக் கென அதிக தொகை ஒதுக்கப்பட்ட முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

கொவிட் - 19 தொற்று நிலைமை காரணமாக பொருளாதாரம் பாரியளவில் வீழ்ச்சியடைந்துள்ள சந்தர்ப்பத்தில் லங்கா பிரிமீயர் லீக் போட்டியை நடத்துகின்றமை பொருளாதாரத்துக்குப் பெரும் பலமாகும்.

கிராம மட்டத்தில் விளையாட்டு மைதானங்களை புனரமைக்கும் போது, இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை சார்ந்த அதிகாரிகளின் பூரண ஒத்துழைப்பு அவசியம்.

கிராம சேவகர் பிரிவு மட்டத்தில் விளையாட்டு மைதானங்களைத் தயாரிக்கும் போது கிராம சேவகர் பிரிவிற்கு விளையாட்டுக் கழகமொன்றை ஆரம்பித்து அந்த விளையாட்டுக் கழகத்தின் தலைமையீட்டுடன் விளையாட்டு மைதானத்துக்கு உகந்த இடத்தைத் தெரிவுசெய்ய வேண்டும்.

பாடசாலை மட்டத்தில் விளையாட்டு மைதானங்களைப் புனரமைக்கும்போது மாகாண கல்வி அலுவலகம் மற்றும் கல்வி அமைச்சுடன் கலந்துரையாடி தேவையான நடவடிக்கைகளை அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டும். - எனக் குறிப்பிட்டார்

அதனைத் தொடர்ந்து கருத்து தெரிவித்த இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ -

எதிர்வரும் ஆண்டளவில் கிராம மற்றும் பாடசாலை மட்டத்தில் விளையாட்டுத் துறையில் வளர்ச்சியை எதிர்பார்ப்பதாகத் தெரிவித்தார்.

அத்துடன், கிராம மட்டத்தில் புரமைக் கப்படும் விளையாட்டு மைதானங்களில் கிராம சேவகர் பிரிவு மட்டத்திலும் பிரதேச மற்றும் மாவட்ட மட்டத்திலும் விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாகவும் நாமல் ராஜபக்ஷ குறிப்பிட்டார்.

விளையாட்டுத் திறன் கொண்ட கிராம இளைஞர், யுவதிகளை தேசிய மட்டத்திலிருந்து சர்வதேச மட்டத்துக்குக் கொண்டு செல்கின்றமை இந்த வேலைத்திட்டத்தின் முதன்மையான நோக்கமாகும் எனவும் அமைச்சர் கூறினார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் இராஜாங்க அமைச்சர் தேனுக விதானகமகே, அமைச்சின் செயலாளர்கள், தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் அதிகாரிகள் மற்றும் இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அதிகாரிகள் சிலரும் கலந்து கொண்டனர்.

# அடுத்த ஐந்தாண்டுகளில் நாட்டை மீட்டெடுப்போம்!

## கெஹலிய சபதம்



2005 ஆம் ஆண்டு ஆட்சியமைக்கும் போது யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்து நாட்டின் அபிவிருத்தியை முன்னெடுக்க எவ்வாறு முடிந்ததோ அதேபோல் அடுத்த ஐந்து ஆண்டுகளில் நாட்டை மீட்டெடுப்போம் என அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல சபையில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் கடந்த வியாழக்கிழமை, 2021 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் இறுதி நாள் விவாதமான நிதி அமைச்சு மற்றும் நிதி இராஜாங்க அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றிய போதே அவர் இதனைக் கூறினார்,

அவர் மேலும் கூறுகையில் -

நல்லாட்சியில் முன்னெடுக்கப்படும் எனக் கூறப்பட்ட வேலைத்திட்டங்கள் நல்லாட்சி காலத்தில் நிறைவுக்கு வரும் என நான் நம்பினேன், ஆனால் துரதிஷ்டவசமாக அதற்கான வாய்ப்புகள் தோல்வியில் முடிவடைந்தன. எனினும் எமது வரவு - செலவு திட்டம் உண்மையாகும்.

அதனை அடுத்த ஆண்டே பார்க்க முடியும். இப்போது அனுபவம் உள்ள குழுவொன்று ஆட்சியை கையில் எடுத்துள்ளது. 2005 ஆம் ஆண்டு எவ்வாறு நாட்டை ஒரு திட்டத்துக்குள் கொண்டுவர முடிந்ததோ, யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்து நாட்டின் அபிவிருத்தியை முன்னெடுக்க முடிந்ததோ அதேபோல் அடுத்த ஐந்து ஆண்டுகளில் நாட்டை மீட்டெடுப்போம். ஜனாதிபதியின் வேலைத்திட்டம் நாட்டுக்கு நல்லதோர் எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.

தேசிய பாதுகாப்பு, தேசிய ஒற்றுமை மற்றும் நாட்டின் அபிவிருத்தியில் நாம் முக்கியத்துவம் கொடுக்கின்றோம். இந்த நிலையில் பிரிவினைவாத அழுத்தங்கள் மீண்டும் தலைதூக்குகின்றன. ஆனால் நாம் சகல மக்களையும் ஒன்றிணைத்து இலங்கையர்களாக வாழ நாம் விரும்புகின்றோம்.

ஆனால் ஒரு சிலர் அதனைக் குழப்ப நடவடிக்கை எடுக்கின்றனர். கொவிட் நிலைமையில் நாட்டை மீட்டுள்ளோம். வீட்டுப் பிரச்சினைக்குத் தீர்வு வழங்கப்பட்டு வருகின்றது, வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டு வருகின்றன. வீதி அபிவிருத்தி துரிதப்படுத்தப்படுகின்றது. இவை அனைத்துமே வெறும் வாய் வார்த்தைகள் அல்ல. எனினும் இதனைத் தாங்கிக்கொள்ளாத நபர்கள் எம்மை விமர்சித்து வருகின்றனர்.

எனினும் மக்கள் எதற்காக எமக்கு வாக்களித்தனரோ அதற்கான நோக்கத்தைத் தொடர்ந்தும் முன்னெடுத்து செல்வோம். எமது வேலைத்திட்டம் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும். - என்றார்.

# இந்தியாவுக்கு 9 கிலோ தங்கம் கடத்திய நபர்கள் ஐவர் கைது!

இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு 9 கிலோ கிராம் தங்கம் கடத்தி செல்லப்பட்டுள்ள நிலையில் ஐந்து பேர் இந்திய கடலோர காவல் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாகத் தெரிய வருவதாவது:-

இந்தியாவில் தூத்துக்குடி வருவாய் புலனாய்வு துறை அதிகாரிகளுக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை மன்னார் வளைகுடா கடல் பகுதியில் ரோந்து பணியில் அவர்கள் ஈடுபட்டனர்.

அப்போது சந்தேகத்திற்கிடமாக நின்று கொண்டிருந்த படகில் இருந்த மண்டபம் மரைக்காயர்பட்டிணம் பகுதியை சேர்ந்த நபரை சோதனை செய்த போது அவரது உடம்பில் மறைத்து வைத்திருந்த சுமார் பல லட்சம் மதிப்பிலான 9 கிலோ கிராம் கடத்தல் தங்கம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

மேலும் அவருடன் இருந்த நால்வர் என மொத்தம் ஐந்து பேரை கைது செய்த இந்திய கடலோர காவல் படையினர், கடத்தலுக்கு பயன்படுத்திய படகு ஒன்றையும் பறிமுதல் செய்துள்ளனர்.

இந்நிலையில், இந்தச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கொழும்பில் கொரோனா தொற்றாளர் அதிகரிப்பு!

கொழும்பு, நவ.12

கொழும்பு மாவட்டத்தில் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையில் மேலும் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

கொரோனா தொற்றைத் தடுப்பதற்கான தேசிய செயலணியால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த (வியாழக்கிழமை) அடையாளம் காணப்பட்ட 538 பேரில், 304 பேர் கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கமைய, கொழும்பு மாவட்டத்துக்கு உட்பட்ட பொறளை பகுதியில் 254 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அத்துடன், மட்டக்குளி பகுதியில் 11 பேருக்கும், கொள்ளுப்பிட்டி, கிருலப்பனை மற்றும் பன்னிபிட்டி ஆகிய பிரதேசங்களில் தலா 4 பேருக்கும் வியாழக்கிழமை தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மேலும், கொம்பனி வீதி, கருவாத்தோட்டம், கிரேண்பாஸ் கொட்டாஞ்சேனை, புளுமென்டல், மருதானை, தெமட்டகொடை, புறக்கோட்டை, பேலியகொடை, மொரட்டுவை மற்றும் ஒருகொடவத்தை ஆகிய பிரதேசங்களிலும் கொரோனா தொற்றாளர்கள் வியாழக்கிழமை அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், கொரோனா தொற்றின் இரண்டாவது அலையில், கொழும்பு மாவட்டத்தில் இதுவரையான காலப்பகுதியில் 13 ஆயிரத்து 265 பேர் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

# நுவரெலியாவில் மாணவிக்குக் கொரோனா 4 ஆசிரியர் 16 மாணவர் தனிமைப்படுத்தலில்!

நுவரெலியா - நாவலப்பிட்டியிலுள்ள பாடசாலையொன்றில் 12 ஆம் தரம் கல்வி பயிலும் மாணவியொருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மாணவிக்கு மேற்கொள்ளப்பட்டிருந்த பி.சி.ஆர். பரிசோதனையின் முடிவுகளிலேயே அவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், அந்த மாணவியைத் தனிமைப்படுத்தல் மையத்துக்கு அனுப்பி வைத்துள்ளதாக சுகாதார அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும் மாணவியுடன் தொடர்பில் இருந்த நான்கு ஆசிரியர்கள் மற்றும் 16 மாணவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

அத்துடன் மாணவியுடன் நெருங்கிய தொடர்பில் இருந்தவர்களையும் கண்டறியும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதேவேளை இந்தப் பாடசாலை, தற்போது தொற்று நீக்கம் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியக பிரதான அலுவலகம் தற்காலிகப் பூட்டு!

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் பிரதான அலுவலகம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

பத்தரமுல்லையில் அமைந்துள்ள வேலைவாய்ப்பு பணியகத்தின் பிரதான அலுவலகத்தில் பணிபுரியும் சாரதிக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் அவருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதனையடுத்து வேலைவாய்ப்பு பணியகத்தில் பணிபுரியும் ஏனைய 50 சாரதிகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

அத்துடன், வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் 0112880500 எனும் 24 மணி நேர தொலைபேசி இலக்கத்தினைத் தொடர்பு கொள்வதன் மூலம் சேவைகளைப் பெற்றுக் கொள்ளமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

# ஏப்ரலில் மாகாணசபைத் தேர்தல் நடத்த அரசு தீர்மானித்துள்ளது!

## என்கிறார் ரணில் விக்கிரமசிங்க

மாகாணசபைத் தேர்தலை ஏப்ரலில் நடத்த அலரி மாளிகையில் பஸில் ராஜபக்ஷ ஏற்பாடுகளை செய்து வருகின்றார். மறுபுறம் பழைய முறைமையில் தேர்தலை நடத்துவதற்கான சட்டமூலத்தை ஆளும் கட்சி ஜனவரி மாதம் நாடாளுமன்றத்தில் சமர்பிக்கவுள்ளதாக ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர்கள் கடந்த வியாழக்கிழமை தலைவரை சந்தித்து கலந்துரையாடினர். இதன் போதே ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் குறிப்பிடுகையில் –

மாகாண சபைத் தேர்தலை ஏப்ரல் மாதத்தில் நடத்துவதற்கான முயற்சிகளில் அரசாங்கம் தீவிரமாக செயற்பட்டு வருகின்றது. கடந்த மற்றும் இவ்வாரம் முழுவதிலும் பஸில் ராஜபக்ஷ அலரி மாளிகையில் இதற்கென பல்வேறு சந்திப்புகளை முன்னெடுத்துள்ளார். இந்தச் சந்திப்புகளில் முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் ஆளுநர்கள் என பல சந்தர்ப்பங்களில் கலந்துக்கொண்டுள்ளனர்.

பழைய முறைமையில் மகாண சபை தேர்தலை நடத்துவதற்கான திருத்த சட்டமூலத்தை ஜனவரியில் நாடாளுமன்றத்தில் ஆளும் கட்சி சமர்பிக்கவுள்ளது.

மாகாண சபை தேர்தலை ஏப்ரல் மாதம் முதல் வாரத்தில் அல்லது மே மாதம் முதல் வாரத்தில் நடத்துவதற்கான ஏற்பாடுகளே அரசாங்கத்திடம் உள்ளன.



ஏப்ரல் மாதத்தில் புத்தாண்டு காணப்படுவதுடன் மே மாதத்தில் வெசக் நிகழ்வுகள் இடம்பெறும். எனவே இந்த இரு நிகழ்வுகளைக் கருத்தில் கொண்டுள்ள அரசாங்கம் பெரும்பாலும் ஏப்ரல் முதல் வாரத்தில் நடத்துவதற்கான வாய்ப்புகளே உள்ளன.

எனவே தேர்தலுக்கு தயாராக வேண்டும். கட்சி மறுசீரமைப்பு பணிகளை விரைவு செய்து வலுவாக செயற்பட வேண்டும். மக்கள் ஆளும் கட்சியில் குறுகிய காலத்தில் வெறுப்பை கொண்டுள்ளனர். எதிர்பார்த்தளவு எதிர்க்கட்சியின் நடவடிக்கைகளும் அமையவில்லை. எனவே ஐக்கிய தேசிய கட்சி மீண்டும் தலைத்தூக்க எதிர்வரும் மாகாண சபை தேர்தல் வழிவகுக்கும் எனவும் குறிப்பிட்டார்.

# ஓட்டோவை வாடகைக்கு அமர்த்தி சாரதி மீது விசமிகள் தாக்குதல்!

ஓட்டோவை வாடகைக்கு அமர்த்திவிட்டு அதன் சாரதியைத் தாக்கிய சம்பவம் ஒன்று வவுனியா பூந்தோட்டம் பகுதியில் கடந்த (வியாழக்கிழமை) இரவு இடம்பெற்றது.

இந்தச் சம்பவம் தொடர்பாகத் தெரிய வருவதாவது:-

வவுனியா நகர தரிப்பிடத்தில் நின்றிருந்த ஓட்டோ ஒன்றை வாடகைக்கு அமர்த்திய நபர் ஒருவர் பல இடங்களுக்கு சென்றமையுடன், மேலும் ஒரு நபரையும் அழைத்துக்கொண்டு பூந்தோட்டம் அகத்தியர் வீதியால் செல்லுமாறு தெரிவித்துள்ளார்.

அந்த வீதியில் வைத்து ஓட்டோச் சாரதியின் தொலைபேசியை வாங்கிய அவர்கள், அதனை உடைத்துள்ளமையுடன், சாரதியையும் தாக்கியுள்ளனர்.

இதனால் அச்சமடைந்த சாரதி ஓட்டோவை அந்த இடத்திலேயே நிறுத்திவிட்டு தப்பிச்சென்றமையுடன், வவுனியா பொலிஸாரிடம் முறைப்பாடு அளித்திருந்தார்.

சம்பவ இடத்துக்கு வருகைதந்த பொலிஸார் ஓட்டோவை அதன் சாரதியிடம் கையளித்தமையுடன், விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.



# கிழக்கு மாகாணத்தில் முதலாவது கொரோனா மரணம் பதிவானது!

கிழக்கு மாகாணத்தில் முதலாவது கொரோனா மரணம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

சம்மாந்துறை பகுதியைச் சேர்ந்த 80 வயதுடைய ஆணொருவர் கடந்த வியாழக்கிழமை இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் லதாகரன் இதனை உறுதிப்படுத்தியுள்ளார்.

# மகாகவி பாரதியாரின் சிலை மட்டக்களப்பில் திறந்துவைப்பு!





மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் பிறந்த தினம் இன்றாகும். இதனை முன்னிட்டு மட்டக்களப்பில் அவரின் திருவுருவச்சிலையொன்று திறந்துவைக்கப்பட்டது.

மட்டக்களப்பு பாடுமீன் அரிமா லயன்ஸ் கழகத்தால் மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் உருவச்சிலை மட்டக்களப்பு – ஊறணியில் நேற்று (வெள்ளிக்கிழமை) காலை திறந்துவைக்கப்பட்டது.

மட்டக்களப்பு பாடுமீன் அரிமா கழகத்தின் தலைவர் இ.மு.நுஸ்வின் தலைமையின் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு, மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரம், மட்டக்களப்பு மாநகரசபை முதல்வர் மற்றும் பிரதிமுதல்வர், மட்டக்களப்பு சிறைச்சாலை அத்தியட்சகர் சுஜீவ விஜயசேர மற்றும் மட்டக்களப்பு பாடுமீன் லயன்ஸ் கழக உறுப்பினர்கள் எனப் பலர் கலந்துகொண்டிருந்தனர்.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டவர்களுக்கு பாரதியாரின் கவிதைத்தொகுப்படங்கிய நூல் வழங்கி வைக்கப்பட்டதுடன், மட்டக்களப்பு லயன்ஸ் கழக உறுப்பினர்கள், அதிதிகளால் சின்னம் சூடியும் கௌரவிக்கப்பட்டனர்.

# பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் பின்னணியில் சீனா காணப்படுகின்றது!

## சாடுகிறது ஐ.தே.கட்சி

கொழும்பு, நவ.12

முறையான விதிகளை பின்பற்றாது நுரைச்சோலை மின் நிலையத்தின் எஞ்சிய கட்டுமானப் பணிகளை சீனாவிற்கு பெற்றுக்கொடுக்கும் திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தமையாலேயே பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவை ரத்து செய்ய ஆளும் கட்சி மும்முரமாக நின்று செயற்படுவதாக ஐக்கிய தேசியக் கட்சி சாடியுள்ளது.

ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர்கள் கடந்த வியாழக்கிழமை தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து கலந்துரையாடிய போதே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

இந்த சந்திப்பில் பிரதி தலைவர் ருவன் விஜேவர்த்தன, பாலித ரங்கே பண்டார , ஆசு மாரசிங்க உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவை ரத்து செய்வதற்கான அறிவிப்பை ஜனாதிபதி செயலாளர் முன்வைக்கின்றார். இதன் பின்னணியில் சீனாவின் திட்டமொன்றுள்ளது. அதாவது நுரைச்சோலை மின் நிலையத்தின் எஞ்சிய கட்டுமானப் பணிகளை சீனா பெற்றுக்கொள்ளும் வகையில் சில நகர்வுகளை முன்னெடுத்துள்ளன. எவ்விதமான விலைமனு கோரலும் இல்லாது நுரைச்சோலை மின் நிலையத்தின் கட்டுமானப் பணிகளை சீனாவுக்கு வழங்கும் திட்டத்தை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு எதிர்த்தமையாலேயே இவ்வாறானதொரு நிலை ஏற்பட்டுள்ளது.

எந்தவொரு நிலைமை காணப்பட்டாலும் அரசமைப்பை மீறி அதிகாரியொருவரால் செயற்பட இயலாது. 2002 – 2004 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில்தான் பொதுப் பயன்பாடு ஆணைக்குழு உருவாக்கப்பட்டது. நாட்டின் எதிர்கால நலன்களைக் கொண்டே இந்த ஆணைக்குழுவை உருவாக்கினோம். தேசிய மின் துறையில் ஏற்படக்கூடிய மோசடிகளைத் தவிர்த்து மக்களுக்கு பயன்தரும் வகையில் இந்த ஆணைக்குழு ஊடாக செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. ஆனால் இன்று மோசடிகளுக்கான ஆணைக்குழுவை ரத்து செய்ய அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது என இதன் போது தெரிவிக்கப்பட்டது.

# வெள்ளவத்தை சைவமங்கையர் கழகத்துக்கு விளையாட்டுத்திடல் பெற டக்ளஸ் உதவுவார்!



கொவிட் -19 தொடர்பான சுகாதார விதிமுறைகளையும் சமூக இடைவெளியையும் பேணி நடைபெற்ற இந்த நிகழ்வில் தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா –

தலைநகரில் தமிழ் மாணவிகளை ஆளுமையாளர்களாக உருவாக்கி வருகின்ற சைவ மங்கையர் வித்தியாலயத்தின் வளர்ச்சியும் அண்மைக் காலப் பரீட்சைப் பெறுபேறுகளும் மகிழ்ச்சி அளிக்கும் வகையில் இருக்கின்றன எனவும், அதற்கான பாடசாலை நிர்வாகத்தினர் மற்றும் ஆசிரியர்களுக்கும், மாணவிகளுக்கும் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறார் எனவும் தெரிவித்தார்.

மேலும், சுமார் 90 வருடங்களுக்கு முன்னர் மூன்று பெண்மணிகளின் தற்துணிவு மிக்க முயற்சியால் உருவாக்கப்பட்ட பாடசாலை தற்போது 1ஏபி பாடசாலையாக பல்வேறு கட்டமைப்புக்களைக் கொண்டு வியாபித்திருப்பது வியக்க வைப்பதாகவும் தெரிவித்ததுடன், அமைச்சர் என்றவகையில் தன்னால் முடிந்த அனைத்து ஒத்துழைப்புக்களையும் வழங்கத் தயாராக இருக்கிறார் எனவும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

வெள்ளவத்தை சைவ மங்கையர் வித்தியாலயத்தின் நீண்ட கால எதிர்பார்ப்பாகக் காணப்படுகின்ற மைதானம் ஒன்றை அமைத்துக் கொள்வதற்குத் தேவையான ஒத்துழைப்புக்கள் அனைத்தையும் வழங்கத் தயாராக இருக்கிறார் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கொழும்பின் முன்னணிப் பாடசாலைகளில் ஒன்றாகத் திகழ்கின்ற மேற்படி பாடசாலையின் 90 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற சிறப்பு பூஜை வழிபாடுகளில் கலந்து கொண்ட பின்னர் பாடசாலை நிர்வாகிகள் மற்றும் ஆசிரியர்களுடனான கலந்துரையாடலின் போதே கடற்றொழில் அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

# பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு உறுப்பினர்கள் பலவந்தமாகவே பதவி விலகச் செய்யப்பட்டார்கள்

## நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார விசனம்



ஜனாதிபதியின் செயலாளர் பி.பி.ஜய சுந்தர பொதுப்பயன்பாடுகள் ஆணைக் குழுவை நீக்க முயற்சித்தார். எனினும் அந்த முயற்சி வெற்றியளிக்காமையால் அதன் உறுப்பினர்களைப் பலவந்தமாகப் பதவி விலகச் செய்துள்ளார் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

இதேவேளை இலங்கையிலுள்ள மருத்துவதுறையினரால் அங்கீகரிக்கப்படாத கை மருந்தை மக்களுக்கு பகிர்ந்தளிப்பதற்குச் சந்தர்ப்பத்தை வழங்கி அரசாங்கம் அதன் பொறுப்பற்ற செயலைக் காண்பித்துள்ளதாகவும் நளின் பண்டார தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறியவை வருமாறு:-

பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு பதவி விலகியுள்ளது. உரிய காரணங்கள் இன்றி இவர்களை பதவிக் காலம் நிறைவடைவதற்கு முன்னர் பதவி நீக்க முடியாது. ஆனால் ஜனாதிபதி செயலாளர் அவ்வாறானதோர் அறிக்கையை வெளியிட்டுள்ளார்.

பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவை இரத்து செய்ய முடியாததால் அதன் உறுப்பினர்களுக்கு அழுத்தம் பிரயோகித்து அவர்களைப் பதவி விலகச் செய்துள்ளார். நிபுணர்களை இந்தப் பதவிகளிலிருந்து நீக்கி தமக்குத் தேவையானவர்களை நியமிப்பதற்கே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் முதலாவது காற்றாலை மின்உற்பத்திநிலையத்துக்கான வேலைத் திட்டம் எமது அரசாங்கத்திலேயே ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் இந்த அரசாங்கம் அதனை தமது வேலைத்திட்டமாகக் காண்பித்து பெருமைப்பட்டுக் கொள்கிறது. இந்த அரசாங்கம் எந்தவொரு புதிய வேலைத்திட்டத்தையும் இதுவரையில் ஆரம்பிக்கவில்லை.

கேகாலையில் நபரொருவர் தயாரித்த கை மருந்தை சுகாதார அமைச்சர் உட்கொண்டுள்ளார். அதனை ஊடகங்கள் பிரபலமாக வெளிப்படுத்திய பின்னர் ஆயிரக்கணக்கான மக்கள் அந்த மருந்தைப் பெறுவதற்காக முண்டியடித்துக் கொண்டிருக்கின்றனர். இலங்கையிலுள்ள மருத்துவத்துறையால் அங்கீகரிக்கப்படாத மருந்தை பொறுப்பற்ற வகையில் இவ்வாறு மக்களுக்கு வழங்க இடமளித்திருப்பது அரசாங்கத்தின் பொறுப்பற்ற செயலைக் காட்டுகிறது. - என்றார்.

## தனிமைப்படுத்தல் விதி மீறிய மேலும் 41 பேர் கைதாகினர்!

தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறிய மேலும் 41 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த 24 மணித்தியாலங்களில் முகக்கவசம் அணியாமை மற்றும் சமூக இடைவெளியை பேணாமை உள்ளிட்ட காரணங்களால் இவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், இதுவரை தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறிய ஆயிரத்து 256 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## கொரோனாவைக் கட்டுப்படுத்துவதற்கு கட்சிபேதம் துறந்து ஒன்றிணைவோம்!

### வசந்த யாப்பா பண்டார எம்.பி. அழைப்பு

கொழும்பு, டிசெ. 12

கொவிட் - 19 தாக்கத்தை கட்டுப்படுத்த வேண்டுமாயின் அரசியல் நோக்கங்களை மறந்து அரசியல்வாதிகள் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் வசந்த யாப்பா பண்டார தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில் -

அரசியல் இலாபத்தை நோக்காகக் கொண்டு எதிர்த் தரப்பினர் போலியான குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றார்கள். நீதிமன்றச் செயற்பாடுகளில் அரசாங்கம் தலையிடவில்லை. நீதித்துறை கடந்த காலத்தை காட்டிலும் சுயாதீனமான முறையில் செயற்படுகிறது.

நல்லாட்சி அரசாங்கம் செய்த தவறை தற்போதைய அரசாங்கம் தொடராது. மக்களாணைக்கு எதிராக செயற்பட்ட காரணத்தாலேயே நாட்டு மக்கள் ஜனாதிபதி தலைமையில் பலமான அரசாங்கத்தைத் தோற்றுவித்துள்ளார்கள்.

மக்களின் எதிர்பார்ப்புக்கு அமைய அரசாங்கம் செயற்படுகிறது. ஆகவே அரசாங்கம் ஒருபோதும் மக்களாணைக்கு முரணாகச் செயற்படாது. கொவிட்-19 வைரஸ் தாக்கத்தை கட்டுப்படுத்த வேண்டுமாயின் அரசியல்வாதிகள் அனைவரும் கட்சிபேதமின்றி ஒற்றுமையுடன் செயற்பட வேண்டும்.

கொவிட் - 19 வைரஸ் விவகாரத்திலும் எதிர் தரப்பினர் அரசியல் இலாபம் தேடிக் கொள்கிறார்கள். பிற நாடுகளில் இவ்வாறான தன்மை கிடையாது. - என்றார்.

## கொரோனா நிதியுதவி தொடர்பில் வெளிப்படைத்தன்மை வேண்டும்!

### ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நெஷனல் வற்புறுத்து

கொழும்பு, டிசெ.12

கொவிட் - 19 வைரஸ் பரவலை எதிர்கொள்ளல் மற்றும் கட்டுப்படுத்தல் ஆகியவற்றுடன் தொடர்புடைய நிதி மற்றும் ஏனைய உதவிகள் தொடர்பாக உயர் வெளிப்படைத்தன்மை பேணப்படுவது அவசியம் என ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நெஷனல் அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

கொவிட் - 19 தடுப்பூசிகளைக் கொள்வனவு செய்யும்போது, பதிவு செய்யப்பட்ட அளவுகள் மற்றும் பாதிக்கப்படக்கூடிய பிரிவினருக்கு முன்னுரிமையளிக்கும் வகையிலான விநியோகத் திட்டங்கள் தொடர்பான தகவல்களை முன்கூட்டியே வெளிப்படுத்த வேண்டும் என்றும் அந்த அமைப்பு கூறியுள்ளது.

இது தொடர்பாக அந்த அமைப்பால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

ஊழலுக்கெதிரான சர்வதேச தினத்தை நினைவுகூரும் அதே வேளை, மறுபுறத்தில் கொரோனா வைரஸ் பரவல் காரணமாகப் பலர் தமது அன்றாட வாழ்க்கையில் நிச்சயமற்ற நிலையை எதிர்கொண்டிருக்கின்றனர். இம்முறை 'நேர்மையாக மீள்வோம்' என்பது ஊழலுக்கெதிரான சர்வதேச தினத்தின் தொனிப்பொருளாக உள்ளது. அத்தகைய மீட்சியை உறுதிசெய்வதற்காக கொவிட் - 19 வைரஸ் தொற்றுடன் தொடர்புடைய ஊழலைத் தடுப்பதில் விசேடமாகக் கவனம் செலுத்தியிருக்கிறோம்.

குறிப்பாக சமூகத்தில் மிகவும் நலிவடைந்த நிலையில் இருப்பவர்களுக்கான நிவாரணம் மற்றும் அத்தியாவசிய மருத்துவசேவைகளை வழங்குவதில் ஊழலின் பாரதூரமான விளைவுகளைக் கருத்திற் கொள்ளும்போது இந்தத் தொனிப்பொருள் எமது நாட்டின் நிலைவரத்துடன் நன்கு பொருந்துகிறது.

கொவிட் - 19 வைரஸ் பரவலை எதிர்கொள்ளல் மற்றும் கட்டுப்படுத்தல் ஆகியவற்றுடன் தொடர்புடைய நிதி மற்றும் ஏனைய உதவிகள் தொடர்பாக உயர் வெளிப்படைத்தன்மை பேணப்படுவது அவசியம் என்று வலியுறுத்தி இந்த வருட ஆரம்பத்தில் பிரதமருக்குக் கடிதமொன்றை அனுப்பிவைத்திருந்தோம். அதன்படி தமக்குக் கிடைத்த உதவிகளை வெளிப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் பற்றி பிரதமர் அலுவலகமும் நிதியமைச்சும் தெளிவுபடுத்தியிருந்தன.

எனினும் அவசரகால கொள்முதல் நடவடிக்கைகள் தொடர்பான தகவல்களை முன்கூட்டியே வெளிப்படுத்துவது அவசியமாகும். கொவிட் - 19 தடுப்பூசிகளைக் கொள்வனவு செய்யும்போது, பதிவுசெய்யப்பட்ட அளவுகள் மற்றும் பாதிக்கப்படக்கூடிய பிரிவினருக்கு முன்னுரிமையளிக்கும் வகையிலான விநியோகத்திட்டங்கள் தொடர்பான தகவல்களை முன்கூட்டியே வெளிப்படுத்த வேண்டும். நாட்டை மீளக்கட்டியெழுப்புவதற்கும் பொதுமக்களின் நம்பிக்கையை வலுப்படுத்துவதற்கும் இந்த விடயங்களை உடனடியாக செயற்படுத்துவது அவசியமானதாகும்.

ஊழலால் ஏற்படக்கூடிய பாரதூரமான விளைவுகள் தொடர்பாகப் பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டியது அவசியம் என்பதால், ஊழலற்ற ஒரு தேசத்துக்கான தமது எதிர்பார்ப்பை பொதுமக்கள் காணொலி மூலமாகவோ அல்லது எழுத்து மூலமாகவோ சமூகவலைத்தளங்களில் பகிர்ந்துகொள்ள முன்வர வேண்டும் என்றும் ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நெஷனல் அமைப்பு வலியுறுத்தியிருக்கிறது.

## ஒரு லட்சம் பேரின் வீடுகள் நாடு பூராகவும் தனிமையில்!

நாடு முழுவதும் சுமார் ஒரு இலட்சம் பேர் வீட்டுத் தனிமைப்படுத்தலில் வைக்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதன்படி இன்று வரை 95 ஆயிரத்து 825 பேர் வீட்டுத் தனிமைப்படுத்தலில் வைக்கப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் றோஹண தெரிவித்துள்ளார்.

கம்பஹா மாவட்டத்திலேயே அதிகளவானவர்கள் வீட்டுத் தனிமைப்படுத்தலில் உள்ளனர்.

இதேவேளை வீட்டுத் தனிமைப்படுத்தலில் உள்ள அனைவரும் அவசியம் தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மற்றும் சுகாதார அதிகாரிகளின் ஆலோசனைகளை பின்பற்றுவதை உறுதி செய்ய வேண்டும்.

இவ்வாறு தனிமைப்படுத்தலில் உள்ளவர்கள் ஏதேனும் அவசர தேவைகள் இருந்தால் வீட்டுச் சுவரில் ஒட்டப்பட்டுள்ள அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள எண்களைத் தொடர்பு கொள்ளலாம்.

வீட்டு தனிமைப்படுத்தப்பட்ட விதிகளை மீறும் எவரும் அபராதம் மற்றும் மூன்று ஆண்டுகள் சிறைத்தண்டனை உள்ளிட்ட சட்ட நடவடிக்கைகளை எதிர்கொள்ள வேண்டி நேரும் என்றும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண மேலும் கூறினார்.

## கடற்படையின் மூலதன கப்பல் காலிமுகத் திடலில்!



'இது உங்கள் கடற்படை' மற்றும் 'உங்கள் கடற்படையை அறிந்து கொள்ளுங்கள்' என்ற கருப்பொருளின் கீழ், கடற்படையின் 70 ஆவது ஆண்டு நிறைவுவிழாவைமுன்னிட்டு இலங்கை கடற்படையின் மூலதனக் கப்பல்கள் காலிமுகத்திடல்கடற்பரப்பில்நங்கூரமிடப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த கப்பல்கள் 13 ஆம் திகதி வரை காலிமுகத்திடல் கடலில் தொடர்ந்து நங்கூரமிட்டு நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் என கடற்படை தெரிவித்துள்ளது.

இலங்கையின் கடல்வள முதன்மை காவலனான கடற்படை தனது 70ஆவது வருட பூர்த்தியை கடந்த புதன்கிழமை வெகு விமர்சையாக கொண்டாடியமை குறிப்பிடத்தக்கது.

## மட்டக்களப்பில் தாதிக்குக் கொரோனா பலரைத் தனிமைப்படுத்த நடவடிக்கை!

மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிகுடி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கோட்டைக்கல்லாறில் கொரோனா தொற்றாளர் ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

கல்முனை அஸ்ரப் வைத்தியசாலையில் கடமையாற்றும் தாதிய உத்தியோகத்தர் ஒருவரே இவ்வாறு அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இந்நிலையில் அவரை, அம்பாறை மாவட்டத்தின் பாலமுனை வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காகச் சேர்ப்பித்துள்ளனர் என சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும், அந்தத் தாதியரின் குடும்பத்தினர் மற்றும் அவருடன் தொடர்பில் இருந்த ஏனையோரையும் தனிமைப்படுத்தும் நடவடிக்கையை முன்னெடுத்துள்ளதாக சுகாதார அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை, கிழக்கு மாகாணத்தில் பேலியகொடை கொவிட் கொத்தணியுடன் சம்பந்தப்பட்ட 481 பேருக்கு, கடந்த வியாழக்கிழமை மாலை வரையில் மொத்தமாக தொற்றுறுதி செய்யப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அழகையா லதாகரன் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அரசியல் கைதிகள் விடுதலை: ஜனாதிபதியே முடிவு எடுப்பார்

## இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த தெரிவிப்பு

'தமிழ் அரசியல் கைதிகள்' என்று தமிழ் அரசியல்வாதிகள் கூறும் சிறைகளிலுள்ள தமிழீழ விடுதலைப்புலிகளின் முன்னாள் உறுப்பினர்கள் மற் றும் அந்த அமைப்பின் ஆதரவாளர்கள் ஆகியோரை விடுவிப்பது தொடர்பில் ஜனாதிபதியே தீர்மானம் எடுக்க வேண்டும்.

-இவ்வாறு சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் கைதிகள் புனர்வாழ்வு இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ் அரசியல்வாதிகள் கூறும் தமிழ் அரசியல் கைதிகள் பயங்கரவாதச் செயற்பாடுகளில் ஈடுபட்ட காரணத்தினாலேயே பயங்கர வாதச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டார்கள்.

அவர்களில் தண்டனை விதிக்கப்பட்டவர்களும், வழக்கு விசாரணையை எதிர்கொள்பவர்களுமே தற்போது சிறைகளில் உள்ளனர்.

எனவே, அவர்களை விடுவிப்பது தொடர்பில் ஜனாதிபதிதான் தீர்மானம் எடுக்கவேண்டும். அது தொடர்பில் நான் எந்தக் கருத்தையும் தெரிவிக்க முடியாது.

தற்போதைய எம்.பி. பிள்ளையான் (சந்திரகாந்தன்) கொலைச் சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரிலேயே அன்று கைதுசெய்யப்பட்டிருந்தார். ஆனால், அதற்கான சாட்சிகள் இல்லாத காரணத்தால் அவர் தற்போது விடுதலை செய்யப்பட்டார்.

கடந்த நல்லாட்சி அரசில் அரசியல் பழிவாங்கல் காரணமாகவே பிள்ளையான் கைதுசெய்யப்பட்டிருந்தார் என்ற குற்றச்சாட்டும் பரவலாக முன்வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில், பிள்ளையானின் விடுதலையை உதாரணம் காட்டி தாம் சொல்லும் 'தமிழ் அரசியல் கைதிகள்' என்ற தமிழ்க் கைதிகளை உடன் விடுதலை செய்யுமாறு தமிழ் அரசியல்வாதிகள் நாடாளுமன்றத்திலும், வெளியிலும் வேண்டுகோள் விடுப்பது நியாயமற்றது. அவர்களின் விடுதலை தொடர்பில் ஜனாதிபதிதான் தீர்மானம் எடுக்க வேண்டும் - என்றார்.

## புதுக்காட்டுச் சந்தியில் விபத்து; ஒருவர் சாவு!

கிளிநொச்சி - புதுக்காட்டுச் சந்தியில் நேற்று இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்த விபத்தில், பளை பிரதேசத்தின் புலோப்பளை மேற்கைச் சேர்ந்த 56 வயதான கிருஷ்ணன் நவநீதன் என்பவரே உயிரிழந்துள்ளார். சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:-

கிளிநொச்சி நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் மீது யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த டிப்பர், புது காட்டுச்சந்தியில் திரும்பிய வேளை இந்த விபத்து ஏற்பட்டுள்ளது எனப் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது. சம்பவத்தில் படுகாயமடைந்தவரை சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்டப் பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்துள்ளார்.

இந்த நிலையில், விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## தென்னை மரவாடி காணி சுவீகரிப்புக்கு எதிரான இடைக்காலத் தடை நீடிப்பு

திருகோணமலை மாவட்டம் திரியாய், தென்னை மர வாடிப் பகுதியில் தமிழர்களின் காணிகளை புராதனச் சின்னங்கள், மையங்கள் என்ற பெயரில் தொல்பொருள் திணைக்களம் சுவீகரிப்பதற்கு எதிரான இடைக்காலத் தடை உத்தரவை திருகோணமலையில் உள்ள கிழக்கு மாகாண மேல் நீதிமன்றம் தொடர்ந்தும் நீடித்தது.

நீதிபதி எம்.இளஞ்செழி யன் முன்னிலையில் இந்த வழக்கு இன்று காலை எடுக்கப்பட்டபோதே இந்த உத்தரவை நீதிபதி விடுத்தார்.

அரசுத் தரப்பில் சிரேஷ்ட சொலிஸிஸ்டர் ஜெனரல் விகும் டி ஆப்ரூவும், மனுதாரர்கள் சார்பில் சட்டத்தரணி கேசவன் சயந்தனும் முன்னிலையாகினர். ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனும் நீதிமன்றத்தில் பிரசன்னமாகியிருந்தார்.

மேற்படி காணிகளில் புராதனச் சின்னங்கள் இருக்குமானால், தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் சம்பந்தப்பட்ட காணியின் உரிமையாளரையும் கூட்டிச் சென்று அதனைக் காட்ட வேண்டும் என்றும் -

அப்படி காட்டப்படடால் அந்தப் பகுதியைப் பாதுகாப்பாகப் பேணுவதற்கு காணி உரிமையாளர் நடவடிக்கை எடுப்பார் என்றும் -

தெரிவிக்கப்பட்ட யோசனையை ஏற்றுக் கொண்டு அதன்படி செயற்பட நீதிமன்றம் பணித்தது.

அவரை மனுதாரர்கள் தமது காணியில் பயிர்ச்செய்கை செய்வதை தடுக்கக் கூடாது என்றும் நீதிமன்றம் தெரிவித்தது. வழக்கு பெப்ரவரி 3 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

## கன்னியா வெந்நீரூற்றுக்கு அருகே இந்து ஆலயம் அமைக்க அனுமதி

திருகோணமலை, டிசெ.11

திருகோணமலை கன்னியா வெந்நீரூற்றுப் பிள்ளையார் கோவில் இருந்த பகுதியில் கோயில் கட்டுவதற்கு அனுமதிக்க இன்று வெள்ளிக்கிழமை திருகோணமலையில் அமைந்துள்ள கிழக்கு மாகாண மேல் நீதிமன்றத்தில் இணக்கம் காணப்பட்டது.

நீதிபதி எம்.இளஞ்செழியன் முன்னிலையில் இன்று இந்த வழக்கு எடுக்கப்பட்டபோதே இந்த இணக்கம் காணப்பட்டுள்ளது.

சர்ச்சைக்குரிய அந்தப் பகுதியில் கோயில் கட்டுவதற்குத் தங்களுக்கு ஆட்சேபனை இல்லை என்றும், எனினும் அந்த நிலத்தில் கோயில் கட்டும் நிலையத்தைத் தங்கள் தரப்பே காட்டும் என்றும் அரச தரப்பில் முன்னிலையான சிரேஷ்ட சொலிஸிஸ்டர் ஜெனரல் விகும் டி ஆப்ரூ தெரிவித்தார். ஆனால், அதனை மனுதாரர் தரப்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் ஆட்சேபித்தார்.

அந்த நிலம் எமது கட்சிக்காரருக்குரியது. அவர் எந்த இடத்தில் கோயில் அமையும் என்பதை அரசுத் தரப்புக்குத் தெரிவிப்பார். குறைந்தது மூன்று வித்தியாசமான இடங்களை அவர் பிரேரிப்பார். அவற்றில் எது இணக்கமானது என்பதை வேண்டுமானால் அரசுத் தரப்பு சுட்டிக்காட்டலாம். - என்றார் அவர்.

அந்த இணக்கத்தை இருதரப்பினரும் ஏற்றுக்கொண்டமையால் அது பற்றிய முடிவை உறுதி செய்வதற்காக வழக்கை பெப்ரவரி 3 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது மன்று.

கன்னியா வெந்நீரூற்றை தொல்லியல் திணைக்களமே பராமரிக்கவேண்டும் என்பதும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



# அரசுக்கு எதிரான கூட்டணியை ஐ.தே.கவே வழிநடத்த வேண்டும்

## ருவான் விஜேவர்தன தெரிவிப்பு



அரசாங்கத்தை கைப்பற்ற வலிமையான அரசியல் சக்தியை நிறுவ வேண்டுமானால், எதிர்க்கட்சி கூட்டணியை வழிநடத்த வேண்டியது ஐ.தே.க.தான் என அந்தக் கட்சியின் துணைத் தலைவர் ருவான் விஜேவர்தன தெரிவித்துள்ளார்.

கடந்த (வியாழக்கிழமை) புத்தளத்தில் கட்சி செயற்பாட்டாளர்களுடன் உரையாற்றிய அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது ருவான் விஜேவர்தன மேலும் கூறியுள்ளதாவது :-

அனைத்து எதிர்க்கட்சிகளும் ஒன்றிணைவதற்கு ஒரு பொதுவான தளம் இருக்க வேண்டும் என்பது தெளிவாகிறது.

மேலும், ஐக்கிய தேசியக்கட்சிதான் அத்தகைய அரசியல் சக்திக்கு தலைமை தாங்க வேண்டும்.

அத்துடன் எங்களது கட்சியில்தான், முதிர்ச்சியடைந்த தலைவர்களைக் கொண்டுள்ளது. அவர்களால் ஒரு பெரிய கூட்டணியை வழிநடத்த முடியும்.

இதேவேளை ஐ.தே.கவை புதுப்பிக்க அனைத்து கட்சி ஆர்வலர்களின் கருத்துக்களையும் கேட்டறிந்து கொள்ள தீர்மானித்துள்ளோம். மேலும் மக்கள் பலர், அரசாங்கத்துக்கு எதிரான ஒரு மாற்று சக்தியைக் கோருகின்றனர். எனவே இந்தத் தேவையை பூர்த்தி செய்ய நாங்கள் கட்சியை புதுப்பிக்க வேண்டிய நேரம் இது எனக் குறிப்பிட்டுள்ளார்.

# துப்பாக்கி ரவைகள், வெடிகுண்டுகள் நுவரெலியா பகுதியில் மீட்கப்பட்டன!



நுவரெலியா, டிசெ. 12

நுவரெலியா – இராகலை, புரூக்சைட் பகுதியில் துப்பாக்கிக்கு பயன்படுத்தும் 10 ரவைகள் மற்றும் கற்களை உடைக்க பயன்படுத்தும் 12 வெடிகுண்டுகள் என்பன மீட்கப்பட்டுள்ளன.

மேலும் சம்பவம் தொடர்பாக, மூன்று சந்தேகநபர்களை இராணுவத்தினர் மற்றும் விசேட அதிரடிபடையினர் கைது செய்துள்ளனர்.

இராகலை பகுதியிலிருந்து நுவரெலியா பகுதிக்கு காரொன்றில் கடந்த (வியாழக்கிழமை) இரவு, சந்தேகநபர்கள் சென்றுக் கொண்டிருந்த வேளையில், இராணுவத்தின் புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கமைய மேற்படி காரை இராகலை – புரூக்சைட் பகுதியில் வைத்து நிறுத்தி, அவர்கள் சோதனை செய்துள்ளனர்.

இதன்போதே துப்பாக்கி ரவைகள் மற்றும் வெடிகுண்டுகள் இராணுவத்தின் புலனாய்வு பிரிவினரால் மீட்கப்பட்டுள்ளன.

மேலும் சம்பவத்தில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள், இராகலை பகுதிகளை சேர்ந்தவர்கள் எனவும் அவர்களை இராகலை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர் எனவும் இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதனையடுத்து பொலிஸ் நிலைய அதிகாரிகள் சந்தேகநபர்களிடம் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமையுடன், நுவரெலியா நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளனர் எனப் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# நுவரெலியாவுக்கு சுற்றுலா செல்வதைத் தவிர்க்கவும்!

நுவரெலியாவிற்கு சுற்றுலா செல்வதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நுவரெலியா மாவட்ட செயலாளர் றோஹண் புஷ்பகுமார இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுதொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள அவர் –

நுவரெலியா மாவட்டத்தில் தற்போது 250 இற்கும் மேற்பட்ட கொரோனா தொற்றாளர்கள் அடையாளங் காணப்பட்டுள்ளனர்.

எனவே நாம் ஒரு சில கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை விதிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம். இதன் பிரகாரம் டிசெம்பர் மாதம் இறுதிப் பகுதிவரை நுவரெலியாவிற்குள் ஏனைய பிரதேசங்களில் இருந்து சுற்றுலாப் பயணிகள் வருகை தருகின்றமையைக் கட்டுப்படுத்துமாறு நாம் கேட்டுக்கொள்கின்றோம்.

குறிப்பாக பண்டிகைக்காலத்தின் போது அதனைத் தவிர்த்து செயற்படுமாறும் கேட்டுக்கொள்கின்றோம்.

நுவரெலியாவிலுள்ள மக்கள் மற்றும் அங்கு சுற்றுலா மேற்கொள்ளத் தீர்மானித்துள்ள ஏனைய பகுதிகளில் உள்ளவர்களின் பாதுகாப்பு கருதியே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நுவரெலியா நகர் பகுதிக்குள் தொற்றாளர்கள் அடையாளம் காணப்படவில்லை. எனினும் நுவரெலியா மாவட்டத்தின் தலவாக்கலை, லிந்துலை, கொட்டகலை, ஹற்றன், மஸ்கெலியா, பொகவந்தலாவை, நோர்வுட், கினிகத்ஹேனை ஆகிய பகுதிகளில் தொற்றாளர்கள் பரவலாக அடையாளங் காணப்பட்டுள்ளனர்.

எனவே சுற்றுலா பயணங்களை தவிர்த்து செயற்படுமாறு நாம் கேட்டுக்கொள்கின்றோம். – எனக் குறிப்பிட்டுள்ளார்.

# 13 ஆயிரம் கோடி புதிய ரூபா தாள்கள் அடிச்சடித்தமை சிம்பாவேயாக இலங்கை மாறுவதை உணர்த்துகிறது!

கொழும்பு, டிசெ.12

நாட்டின் பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்க அரசாங்கம் புதிதாக 130 பில்லியன் ரூபாக்களை அச்சடித்துள்ளதாகவும், இந்த திட்டமானது இலங்கையைப் பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளப்போவதாகவும் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க சபையில் தெரிவித்தார்.

2020 ஆம் ஆண்டை விடவும் 2021 ஆம் ஆண்டு மிக மோசமான ஆண்டாக அமையப்போகின்றதாகவும், பொருளாதார ரீதியில் பாரிய நெருக்கடி ஏற்படப்போவதுடன், கடன் நெருக்கடியில் நாடு விழப்போகின்றது எனவும் அவர் எச்சரிக்கை விடுத்தார்.

நாடாளுமன்றத்தில் கடந்த வியாழக்கிழமை, 2021 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவு திட்டத்தின் இறுதி நாள் விவாதமான நிதி அமைச்சு மற்றம் நிதி இராஜாங்க அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றிய போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் –

நாட்டின் பொருளாதார நிலைமை வீழ்ச்சி காரணமாக மக்கள் பாரிய நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளனர். சகல தொழில் துறைகளும் வீழ்ச்சி கண்டுள்ளன. கடந்த எட்டு மாதங்களில் 3 வீதமே வாகன இறக்குமதி செய்யப்பட்டுள்ளது,

அதேபோல் நாட்டின் நிலைமையைக் கருத்தில் கொண்டு இறக்குமதியைத் தடை செய்வதாக அரசாங்கம் கூறுகின்ற நிலையில் உலக நாடுகள் இதற்கு எதிராக செயற்பட ஆரம்பித்துள்ளன. இறக்குமதியை நிறுத்தினால் ஏற்றுமதியும் தடைசெய்யப்படும் நிலைமை ஏற்படும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதேபோல் கடன் நெருக்கடி நிலைமையில் இந்த வரவு – செலவுத் திட்டத்தில் எந்தவொரு பிரச்சினைக்கும் தீர்வுகள்கிடைக்கவில்லை. வெறுமனேஏமாற்றுவேலைத் திட்டமொன்றையே அரசாங்கம் மேற்கொண்டுள்ளது.

வீதி அபிவிருத்திக்கும் அரசாங்கம் முக்கியத்துவம் கொடுத்துள்ளது, நாட்டின் சகல அதிவேக நெடுஞ்சாலைகளும் அபிவிருத்தி செய்யப்படும் என அரசாங்கம் கூறுகின்றது, இப்போதே சில இடங்களில் வீதி அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டும் உள்ளன, இன்று நாட்டிற்கு வீதி அபிவிருத்தியா அவசியம்? நிறுவனங்கள் வீழ்ச்சி கண்டுள்ள நிலையில் தொழிலாளர்களுக்கு முழுமையான வருமானம் இல்லாத நிலையில் வீதிகளை அபிவிருத்தி செய்து மக்கள் பயன் பெறுவார்களா?

அரசாங்கம் வீதி அபிவிருத்தியை வைத்து அடுத்த மாகாணசபை தேர்தலை இலக்கு வைக்கின்றது என்பது தெளிவாக தெரிகின்றது. 2020 ஆம் ஆண்டை விடவும் 2021 ஆம் ஆண்டு மிக மோசமான ஆண்டாக அமையப்போகின்றது, பொருளாதார ரீதியில் பாரிய நெருக்கடி ஏற்படப்போகின்றது, கடன் நெருக்கடியில் நாடு விழப்போகின்றது. எனவே அரசாங்கம் புதிய பணத்தை அச்சடித்து நிலைமைகளை கையாள நினைக்கின்றது, நவம்பர் மாதம் தொடக்கம் அடுத்த ஆண்டு டிசெம்பர் வரையில் 130 பில்லியன் ரூபாக்கள் அச்சடிக்கப்பட்டுள்ளன. இது நவீன பொருளாதார நகர்வு என கூறினாலும் சிம்பாப்வே நாட்டுக்கு ஏற்பட்ட நிலைமை ஏற்படப்போகின்றது. புதிதாக பணம் அச்சடித்ததன் விளைவையும் அடுத்த ஆண்டில் பார்க்கத்தான் போகின்றோம்.

அரச நிறுவனங்கள் ஒன்றின்பின் ஒன்றாக வீழ்ச்சி கண்டு வருகின்றன, நல்லாட்சியில் இலாபமடைந்த 11 நிறுவனங்களும் நட்டமடைந்துள்ளன. இவற்றை மீட்டெடுக்க தெரியாது அரச சொத்துக்கள் விற்கும் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. கொழும்பில் பல நிலங்கள் சர்வதேசத்துக்கு விற்கப்படவுள்ளன, நாட்டில் முக்கியமான இடங்களும் வெளிநாடுகளுக்கு விற்கப்படுகின்றன.

இதனால் சமூகத்தில் பாரிய வெடிப்பொன்று உருவாக்கப்போகின்றது. இதற்கு ஒரு சில ஊடகங்களும் துணை போகின்றன. இந்நிலையில் கொரோனாவையும் ஊழலாக மாற்றியுள்ளனர். நாட்டில் பொய்யான பூதமொன்றை உருவாக்கி அதன் மூலமாக மக்களின் பணம் கொள்ளையடிக்கப்பட்டு வருகின்றது. – என்றார்.

# சுற்றுச்சூழலை சுத்தமாக வைத்திருக்கும் குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதி!

## ஹியுமெடிக்கா திட்டப்பணிப்பாளர் அறிவிப்பு

டெங்கு நுளம்பு பரவாமல் தங்களது வீட்டையும் சுற்றுச்சூழலையும் சுத்தமாக வைத்திருக்கும் குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதி வழங்கப்படும் என ஹியூமெடிக்கா நிறுவன திட்ட இணைப்பாளர் ந.நல்லசிங்கம் தெரிவித்தார்.

ஹியூமெடிக்கா சர்வதேச தொண்டு நிறுவனத்தால் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஊர்காவற்றுறை பிரதேச மக்களுக்கு கடந்த புதன்கிழமை நுளம்பு வலைகள், போர்வைகள் என்பன வழங்கிவைக்கப்பட்டன.

பிரதேச செயலகத்தினரால் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு இந் நிறுவனத்தால் உதவிப் பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் உரையாற்றிய தொண்டுநிறுவனத்தின் திட்டப்பணிப்பாளர் –

கொரோனா வைரஸ் தாக்கம் மற்றும் அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எங்களால் உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. அவ்வாறே நாம் தற்போது ஊர்காவற்றுறை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட 200 குடும்பங்களுக்கான நுளம்பு வலைகள் 100 குடும்பங்களுக்கு போர்வையையும் வழங்கிவைத்துள்ளோம்.

மேலும் நீர்த்தோக்கம் காரணமாக டெங்கு நுளம்புகளில் இருந்து மக்களைப் பாதுகாக்கும் திட்டத்தில் தன்னார்வத் தொண்டு நிறுவனமான நாம் எதிர்காலத்தில் டெங்கு நுளம்பு பரவாமல் தங்களது வீட்டையும் சுற்றுச்சூழலை சுத்தமாக வைத்திருக்கும் குடும்பங்களை ஊக்குவிக்கும் முகமாக டெங்கு நுளம்பு பரவாமல் தங்களது வீட்டையும் சுற்றுச்சூழலையும் சுத்தமாக வைத்திருக்கும் குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதி வழங்கவுள்ளோம். இதற்காக ஒரு குழு அமைத்து அந்த குழுவினர் வீடுகளைப் பார்வையிடும் போது சுத்தமாகவும் சுகாதாரமாகவும் உள்ள வீட்டாருக்கு உலர் உணவுப் பொதி வழங்கவுள்ளோம். – என்றார்.

இந்த நிகழ்வில் ஊர்காவற்துறை பிரதேச செயலாளர் கிராம அலுவலர், பொதுச் சுகாதாரப் பரிசோதகர் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# களனி உள்ளிட்ட பகுதிகளில் புதிய கொத்தணி உருவாகலாம்!

## அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே எச்சரிக்கை



களனி, திஹாரி மற்றும் வத்தளை ஆகிய பகுதிகளில் வைரஸ் பரவலின் புதிய கொத்தணிகள் உருவாக வாய்ப்புள்ளதாகவும், அதனை வெற்றிக்கொள்வதற்கு விசேட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்று நோயியல் மற்றும் கொவிட் தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பான இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

கம்பஹா மாவட்டத்தில் கொவிட் - 19 வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் கம்பஹா மாவட்ட செயலாளர் காரியாலயத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ள அவர் அங்கு மேலும் கூறியுள்ளவை வருமாறு:-

மினுவாங்கொட மற்றும் பேலியகொடயை அண்மித்த பகுதிகளில் கொவிட் - 19 வைரஸ் பரவலின் இரண்டாம் அலை, கம்பஹா மாவட்டத்தில் ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. கம்பஹா மாவட்டத்தில் இதுவரையில் முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகளுக்கமைய வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களின் தொகை 8.6 சதவீதத்திலிருந்து 3.2 என்ற சதவீதத்திற்கு குறைவடைந்துள்ளது. இது ஒரு சிறந்த பெறுபேறாகும். இந்நிலையில் வைரஸ் தொற்றுக்குள்ளாகுபவர்களின் தொகையை 2.5 சதவீதத்திற்குள் குறைத்துக் கொள்வதும் மிக முக்கியமாகும்.

இந்தளவுக்கு வைரஸ் தொற்றாளர்களின் தொகையை குறைத்துக் கொள்வதற்கு ஒத்துழைப்பு வழங்கிய ஜனாதிபதி உட்பட அரச தலைவர்கள், இராணுவத் தளபதி உட்பட பாதுகாப்பு படையினர் மற்றும் பொலிஸாருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன்.

கம்பஹா மாவட்டத்தில் கடந்த ஒக்ரோபர் மாதத்திலிருந்து இதுவரையில் 82 ஆயிரம் வரையிலான பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன்போது 5 ஆயிரத்து 589 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதேவேளை 32 முதலீட்டு வலய நிறுவனங்களிலும் 20 ஆயிரத்துக்கும் அதிகமான பி.சி.ஆர். பரிசோதனைகள் செய்யப்பட்டுள்ளன. அதற்கமைய கம்பஹா மாவட்டத்தில் நாள் ஒன்றுக்கு 2 ஆயிரம் பி.சி.ஆர். பரிசோதனைகள் வரை செய்யப்பட்டு வருகின்றன. இதேவேளை அந்த பகுதியில் பிரதேச சுகாதார பணிப்பாளர் காரியாலயம் உட்பட 16 சுகாதார காரியாலயங்கள் சேவையில் ஈடுபட்டு வருகின்றன.

வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் செயற்பாடுகளில் மக்களின் பங்களிப்பு குறைவாக காணப்படுகின்றமையால், மக்களின் பங்களிப்பை பெற்றுக் கொள்வதற்காக சுகாதார பிரிவு மட்டுமன்றி, மத குருமாரும் மக்களைத் தெளிவுப்படுத்த வேண்டும். வைரஸ் பரவலை வெற்றி கொண்டதில் நாம் வரலாற்று சிறப்பிடத்தைப் பெற்றிருந்தாலும், மீண்டும் ஏற்பட்டுள்ள இந்த வைரஸ் பரவலை வெற்றி கொள்ள மக்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

களனி, திஹாரி மற்றும் வத்தளை ஆகிய பகுதிகளில் வைரஸ் பரவலின் புதிய கொத்தணிகள் உருவாகுவதற்கு வாய்ப்புள்ளதால் அதனைக் கட்டுப்படுத்துவதற்கு, விசேட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். கம்பஹா மாவட்டத்தில் வைரஸ் பரவல் காரணமாக தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் வாழ்வாதாரத்தை இழந்த 5 லட்சத்து 39 ஆயிரத்து 543 பேருக்காக 2 ஆயிரத்து 697 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதற்கமைய 5 ஆயிரம் ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளது. தனிமைப்படுத்தப்பட்டுள்ள 11 ஆயிரத்து 28 குடும்பங்களுக்காக 10 ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதிகளும் வழங்கப்பட்டுள்ளன.

இதேவேளை, 30 ஆயிரத்து 546 குடும்பங்களுக்காக 92 மில்லியன் ரூபா பணத்தை அரசாங்கம் செலவிட்டுள்ளது. வீடுகளிலேயே தனிமைப்படுத்தி வைக்கப்பட்டுள்ள 3 ஆயிரத்து 702 குடும்பங்களுக்காக 2 ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவு பொதிகளும் வழங்கப்பட்டுள்ளன. இதுவரையில் வைரஸ் பரவல் காரணமாக 25 ஆயிரம் வீடுகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளமையுடன், இது தொடர்பில் 500 பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

# கண்டியில் மூடப்பட்ட பாடசாலைகளை மீள ஆரம்பிப்பதற்கு ஆளுநர் முடிவு!

கொரோனா தொற்றுப் பரவல் காரணமாக கண்டி நகரில் மூடப்பட்டுள்ள பாடசாலைகள் சிலவற்றின் கல்வி நடவடிக்கைகளை மீளவும் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, கண்டிநகரில் அமைந்துள்ள 42 பாடசாலைகள் எதிர்வரும் 14 ஆம் திகதி மீண்டும் திறக்கப்படவுள்ளன.

கொரோனா அச்ச நிலை காரணமாக, கண்டி நகரில் மூடப்பட்டிருந்த 45 பாடசாலைகளின் கல்வி நடவடிக்கைகள் கடந்த 7ஆம் திகதி மீண்டும் ஆரம்பிக்கப்படுமென முன்னதாக அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், கண்டி நகரில் கொரோனா தொற்றாளர்கள் மேலும் அடையாளம் காணப்பட்ட நிலையில், இந்தப் பாடசாலைகளை இன்று வரை தொடர்ந்தும் மூடுமாறு மத்தியமாகாண ஆளுநர் அறிவுறுத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# நில நடுக்கம் தொடர்பில் விசாரணை முன்னெடுக்க 11 பேர் அடங்கிய குழு!

கண்டி நகரின் பல பகுதிகளிலும் பதிவு செய்யப்பட்ட நில அதிர்வு தொடர்பில் விசாரணை முன்னெடுப்பதற்கு 11 பேர் அடங்கிய நிபுணர் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

புவிசரிதவியல் மற்றும் சுரங்க பணியகத்தின் தலைவர் அநுர வல்பொல இதனைத் தெரிவித்துள்ளார்.

கண்டி நகரின் பல பகுதிகளில் அண்மையில் பதிவு செய்யப்பட்ட நில நடுக்கம் மற்றும் எதிர்காலத்தில் அதன் தாக்கம் என்பன தொடர்பில் நிபுணர் குழுவால் ஆராயப்படவுள்ளது.

இதேவேளை தொடர்ந்தும் நிலநடுக்கம் ஏற்படுமிடத்து அதனால் ஏற்படும் சேதங்களை தவிர்ப்பது தொடர்பிலும் இந்தக் குழுவினரால் விரிவாக ஆராயப்படவுள்ளது.

# வவுனியாவில் இனம்தெரியாத குழு ஒன்று அட்டகாசத்தில்!

வவுனியா வேலங்குளம் பகுதியில் இனந்தெரியாத நபர்களால் கடை மற்றும் வீடுகள் உடைக்கப்பட்ட சம்பவம் ஒன்று கடந்த வியாழக்கிழமை இரவு இடம் பெற்றிருந்தது.



இந்தச் சம்பவம் பற்றி தெரியவருவதாவது -

வவுனியா வேலங்குளம் மற்றும் மடுக்குளம் பகுதியில் வியாழக்கிழமை இரவு 11 மணியளவில் முகமூடி அணிந்த இனந்தெரியாத குழு ஒன்று வீடுகள் மற்றும் கடை ஒன்றை உடைத்துவிட்டு வீட்டினுள் இருந்தவர்களை அச்சுறுத்திவிட்டு அங்கிருந்து தப்பித்து சென்றுள்ளனர்.

இதன்போது, அந்தப் பிரதேசத்தை சேர்ந்த இரண்டு வீடுகள் மற்றும் ஒரு சிறிய கடை ஒன்றும் இக்குழுவால் அடித்து உடைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக வவுனியா பூவரசங்குளம் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணையை பூவரசங்குளம் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# இராமநாதபுரத்தில் இரத்ததானம்



இராமநாதபுரம் மகாவித்தியால பழையமாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் கடந்த 29.11.2020 அன்று பாடசாலையில் ஒரு இரத்தான முகாம் நடத்தப்பட்டது. மூன்றாவது வருடமாக நடத்தப்பட்ட இந்த முகாமில் ஐம்பதுக்கும் மேற்பட்டோர் பங்குபற்றி இரத்ததானம் வழங்கினர்.


இலங்கை தமிழ் சங்கம் USA
Thamilar Sangamam - 2020
Worldwide Broadcast : Dec. 12& 13, 2020
YouTube
Live Link (Active Dec. 12, 8 am) www.sangam.org
www.sangamEvents.org ( Backup)

| Date (USA) | நிகழ்ச்சி நிரல் | அமெ. கிழக்கு | ஐரோப்பா | இலங்கை/ இந்தியா | தென் ஆபிரிக்கா | மலேசியா |
|---|---|---|---|---|---|---|
| Saturday 2020 - 12 - 12 \|(USA) | யூ டியூப்/ முகப் புத்தகம் ஆரம்பம் | 8am | 1pm | 6.30pm | 3pm | 9pm |
| | வரவேற்பு நடனம்/ இசை மலேசியா : இயல் இசை நாடகம் | 9am | 2pm | 7.30pm | 4pm | 10pm |
| | சீமான் பேச்சு முன்னோட்டம் நடனம்: 'முத்தைத் தரு பக்தி' உலகளாவிய நிகழ்வு | 10am | 3pm | 8.30pm | 5pm | 11pm |
| | மெல்லிசை கணேஷ் கிருபா - GK பாடகர்கள் அறிமுகப் பிரிவு | 11am | 4pm | 9.30pm | 6pm | 12midn |
| | இசையுடன் ஒரு மணி நேர இடைவேளை | | | | | |
| | உலகளாவிய நிகழ்வுகள் தெ.ஆபிரிக்கா, நோர்வே, பிரான்ஸ்,பிரிட்டன், அமெரிக்கா (TBD) | 2pm | 7pm | 12.30pm | 9pm | 3am |
| | அலைகள் : உலகளாவிய இசை அரங்கில் தமிழ் இசைக் கலைஞர்கள், பேர்ள் | 4pm | 9pm | 2.30am | 11pm | 5am |
| | அமெரிக்க நடனங்களும் தமிழ் பாடசாலைகளும் | 5pm | 10pm | 3.30am | 12midn | 6am |
| | கனடா: நடனம்/ இசை தேர்ந்த கருப்பொருள்களின் மறு ஒலிபரப்பு | 6pm | 11pm | 4.30am | 1am | 7am |
| | புளோரிடா - வயலின் (பாரம்பரியம்) நடனம்: 'தீராத விளையாட்டு' | 8pm | 1am | 6.30am | 3am | 9am |
| | கணேஷ் கிருபாவின் ஈழ, தத்துவப் பாடல்கள் | 9pm | 3am | 7.30am | 5am | 10am |

Saturday Program Ends. Rebroadcast for Asia Viewers
Secretary@sangam.org
Phone: (011) - 732 - 743 - 5468

# உலகில் அதிக யானைகள் இறப்பு இலங்கையில் பதிவு!

மனிதன் - யானை மோதலால் உலகில் அதிக எண்ணிக்கையிலான யானையின் இறப்புக்கள் இலங்கையில் ஆண்டுதோறும்பதிவாகின்றன என்று அரசாங்கக் கணக்கு பற்றிய குழு (கோபா) தெரிவித்துள்ளது.

அதேநேரம் மனிதன் - யானை மோதலால் அதிக எண்ணிக்கையிலான மனித இறப்புகள் பதிவாகும் நாடுகளின் பட்டியலில் இந்தியாவுக்கு அடுத்தபடியாக இலங்கை உள்ளது.

இலங்கையில் மனித - யானை மோதலை சுற்றியுள்ள பிரச்சினைகள் தொடர்பாக நடைபெற்ற கலந்துரையாடலின் போது இது தொடர்பாக கோபா குழுவுக்கு அறிவிக்கப்பட்டது.

அதே நேரத்தில் இந்த விவகாரத்தை ஆய்வு செய்ய நியமிக்கப்பட்ட குழு அதன் கண்டுபிடிப்புகள் தொடர்பாகக் குழுவுக்கு விளக்கமளித்தது.

மனித - யானை மோதலால் இலங்கையில் ஒரு வருடத்துக்கு சராசரியாக 272 யானைகள் உயிரிழக்கின்றன எனக் கூறப்பட்டது. எனினும் கடந்த ஆண்டு மாத்திரம் அந்த எண்ணிக்கை 407 ஆக உயர்வடைந்துள்ளது.

அத்துடன் இந்தப் பிரச்சினை காரணமாக ஆண்டுதோறும்சராசரியாக 85 நபர்கள் உயிரிழக்கின்றனர் எனக் கூறப்பட்ட போதிலும் கடந்த ஆண்டு 122 பேர் உயிரிழந்துள்ளனர் என இதன்போது தெரிவிக்கப்பட்டது.

# முஸ்லிம் உடல் எரிப்பைக் கண்டித்து வவுனியாவில் தனி மனிதப் போராட்டம்!



கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகி மரணிக்கும் முஸ்லிம்களின் உடல்கள் எரிக்கப்படுகின்றமைக்கு எதிராக வவுனியாவை சேர்ந்த மௌலவி ஒருவர் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தார்.

வவுனியா பெரிய பள்ளிவாசலுக்கு முன்பாக காலை நேற்று 10.30 மணிக்கு இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது போராட்டத்தில் ஈடுபட்ட மௌலவி தெரிவித்துள்ளவை வருமாறு:-

கொரோனா ஒரு கொடிய உயிர் கொல்லி நோயல்ல.

பன்றி இறைச்சியில் உள்ள வைரஸைவிட கொரோனாவில் கொடிய வைரஸ்கள் கிடையாது. காய்ச்சலும், தலை வலியும், சளியும் எப்படி ஒரு மனிதனைக் கொல்லும்.

கொரோனாவுக்குத் தீர்வு உடல்களை எரிப்பதா? ஏன் இந்த அநியாயத்தை முஸ்லிம்களுக்குச் செய்கிறீர்கள். இன்று வரை இறப்பவர் கொரோனாவால்தான் இறக்கின்றனர் என்று எந்த ஒரு வைத்தியரும் நிரூபிக்கவில்லை. யார் இந்த அரசுக்கு பிடிக்காதோ அவர்களுக்கு கொரோனா எனச் சொல்கிறார்கள்.

எனவே பரிசோதனைக்கு செல்பவர்கள் உங்களுக்கான பரிசோதனை அறிக்கையை வைத்தியர்களிடம் கேளுங்கள்.

இலங்கையில் இறந்த ஒருவருக்கும் கொரோனா இல்லை. வைத்திய துறையிலேயே இருக்கும் அறிவார்ந்த வைத்தியர்கள் இந்த அதிகாரிகளுக்குப் பயந்து பின்னால் நிற்கின்றார்கள்

ஆளும் கட்சியிலும் நேர்மையானவர்கள் இருக்கின்றார்கள். மிகவிரைவில் அவர்கள் வெளியிலே வருவார்கள்.

முள்ளிவாய்க்காலில் உரிமை கேட்டவர்களை மெனிக்பாமில் அடைத்தீர்கள். இது நியாயமா, தமிழனும் முஸ்லிமும் கதைத்தால் தீவிரவாதி. ஆட்சி வெறி, அதிகார வெறி, அரசியல் துஷ்பிரயோகம் ஆகியவையே உங்களை இப்படி செய்விக்கின்றன.- என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# உண்ணாவிரதப்போராட்டத்தில் மெனிங் சந்தை வர்த்தகர்கள்!



பேலியகொட மெனிங் சந்தை வர்த்தகர்கள் இரண்டாவது நாளாக நேற்று (வெள்ளிக்கிழமை) சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

பேலியகொட மெனிங்சந்தையின் வியாபாரிகளுக்குச் சொந்தமான கடைத் தொகுதிகளை உரிய முறையில் வழங்குமாறு கோரியே, கொழும்பு - கோட்டையில் கடந்த வியாழக்கிழமை காலை போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஆனாலும், வியாழன் பிற்பகல் வரை அந்தப் பிரச்சினைக்கு உரிய தீர்வை முன்வைக்காதமையால் அவர்கள், சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தை தற்போது முன்னெடுத்துள்ளனர்.

எமது பிரச்சினைகளுக்கு அதற்கு பொறுப்பான அமைச்சர் கலந்துரையாடத் தவறுவாரானால், நாடு முழுவதும் உள்ள பொருளாதார மையங்கள், இந்த உண்ணாவிரதத்தை ஆதரிக்கும் என்று எதிர்பார்ப்பதாகப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும் இந்த விடயம் தொடர்பாக மெனிங் சந்தை வணிக சமூகத்தின் பொருளாளர் நிமல் அத்தநாயக்க கூறியுள்ளவை வருமாறு:-

நாங்கள் தெருக்களில் இருப்பவர்கள் அல்லர்.

மேலும் எங்களது மெனிங் சந்தையை கோட்டையில் விரைவில் திறக்குமாறு ஜனாதிபதியைக் கேட்டுக்கொள்கின்றோம்.நாங்கள் மகிழ்ச்சியுடன் மூன்றரை ஏக்கரில் வர்த்தகம் செய்தோம். ஆனால் நீங்கள் 13 ஏக்கர் பெட்டிக் கடையை கட்டி, எங்களுக்கு ஒரு சிறிய பெட்டிக் கடையைத் தருவீர்களா? -எனக் கேள்வி எழுப்பியுள்ளார்.

# முன்பள்ளிகள் ஜனவரி ஆரம்பம்!

எதிர்வரும் ஜனவரி மாதம் முன்பள்ளிகளை ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக்கல்வி, பாடசாலை உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கல்விச் சேவை இராஜாங்க அமைச்சர் பியல் நிசாந்த இதனைத் தெரிவித்துள்ளார்.

முன்பள்ளிகளை ஆரம்பிப்பது தொடர்பில் பல சுற்று கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்படவுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், சுகாதார அமைச்சின் பரிந்துரைகள் கிடைக்கும் வரை இது தொடர்பான தீர்மானங்களை அமுல்படுத்த முடியாதுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

தேசிய முன்பள்ளி கொள்கையை ஜனாதிபதியிடம் கையளிக்கவுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அது தொடர்பான சட்டமூலத்தை கல்வி அமைச்சர் பேராசியிர் ஜி.எல்.பீரிஸிடம் கையளிக்கவுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

## எதிர்த் தரப்பினரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

குழப்ப நிலையால் சபையின் செயலாளரும், எதிரணியைச் சேர்ந்த 2 பெண் உறுப்பினர்களும் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

எதிர்த்தரப்பினர் பிறிதொரு தினத்தில் சபை அமர்வை நடத்துமாறு தெரிவித்து நேற்று கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். தங்களது சபை உறுப்பினர்கள் இருவர் சிறைச்சாலையில் விளக்கமறியலில் உள்ளனர் எனவும், அதனால் பொருத்தமானதொரு தினத்தில் சபை அமர்வை நடத்த ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் கோரி நேற்று சபை அமர்வை ஒத்திவைக்குமாறு தெரிவித்து எதிர்த்தரப்பினர் கவனயீர்ப்புப் போராட்டத்தை மேற்கொண்டிருந்தனர்.

காலை 7 மணிக்கு இடம்பெற்ற குழப்ப நிலையானது முற்பகல் 10.30 மணி வரை நீடித்தது. சபை மண்டபத்துக்கான பிரதான நுழைவாயிலைப் பூட்டி வைத்து எதிர்த் தரப்பினர் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதேவேளை, தவிசாளர் திருமதி சோபா ஜெயரஞ்சித் இருந்த அறைக்கதவு பூட்டப்பட்டு காணப்பட்டது. இதனால் தவிசாளர் வெளியேற முடியாத நிலையில் காணப்பட்டார். இதனால் கட்சி ஆதரவாளர்களுக்கிடையே பதற்ற நிலை ஏற்பட்டது.

கலவரத்தைத் தடுக்கப் பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். காலை 9 மணிக்கு ஆரம்பமாகவிருந்த சபை அமர்வு குறித்த நேரத்துக்கு ஆரம்பிக்கப்பட முடியாத அசாதாரண சூழ்நிலை காணப்பட்டது.

பிரதானவீதியில்பொதுமக்கள்நிறைந்து காணப்பட்டனர். சபை மண்டபம் மற்றும் வளாகத்தினுள் என்ன நடக்கின்றது என்று அறிய மக்கள் ஆவலாக இருந்தனர். காலை 8.30 மணியளவில் சபை மண்டபத்துக்குப் பிரவேசிக்க வந்த செயலாளருக்கு அனுமதி மறுக்கப்பட்டு கோரிக்கைகளை எதிர்த்தரப்பினர் முன்வைத்தனர். அதனைச் செவிமடுத்த செயலாளர் திருமதி.ப.லிங்கேஸ்வரன் அதே இடத்தில் மயக்கமடைந்து தரையில் வீழ்ந்தார்.

குறித்த சம்பவத்தைக் கேள்வியுற்று சம்பவ இடத்துக்கு தமிழ் மக்கள் விடுதலைப்புலிகளின் தலைவரும் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சிவநேசத்துரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) வருகை தந்திருந்தார்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் அவர் பேச்சில் ஈடுபட்டார். சபை அமர்வு ஒத்திவைக்கப்படும் என வாக்குறுதி அளிக்குமாறு அவர்கள் கோரினர். எனினும், தன்னை உள்ளே செல்ல அனுமதிக்குமாறு மீண்டும் மீண்டும் பிள்ளையான் கோரினார். தவிசாளருடன் பேசிவிட்டு பதில் கூறுவதாகவும் பிள்ளையான் தெரிவித்தார். இரு தரப்புக்கும் இடையில் இழுபறி நிலை காணப்பட்டதால் பிள்ளை யான் அவ்விடத்தை விட்டு விலகிச் சென்று சபை அலுவலகத்தில் தரித்து நின்றார். மீண்டும் எதிர்த்தரப்பினர் கோஷங்களை எழுப்பினர். சிறிது நேரத்தின் பின்னர் சபை மண்டபத்தில் உள்ளே இருந்த தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் சபை உறுப்பினர்கள் கதவைத் தள்ளிக்கொண்டு எதிர்ப்புக்கு மத்தியில் வெளியேறி பூட்டப்பட்டு காணப்பட்ட பிரதான நுழைவாயில் கதவின் பூட்டை உடைத்தெறிந்து வாயிலைத் திறந்தனர். இதன்போது பெரும் கூச்சலும் குழப்ப நிலையும் காணப்பட்டது.

இதையடுத்து பிள்ளையான் சபை மண்டபம் அமைந்துள்ள வளாகத்துக்குள் உள்நுழைந்தார். ஆனால், சபை அமர்வு மண்டபத்துக்குள் செல்லவில்லை. பின்னர் தவிசாளர் அடைபட்டிருந்த அறைக் கதவின் பூட்டும் உடைக்கப்பட்டு தவிசாளர் வெளியேற்றப்பட்டார். சபை அமர்வு மண்டபத்துக்குள் எதிர்த்தரப்பினரின் மறியல் போராட்டத்தையும் தகர்த்து அவர் சார்பு சபை உறுப்பினர்களின் ஆதரவுடன் உள்ளே அழைத்துச் செல்லப்பட்டு கதவு பூட்டப்பட்டது.

ஊடகவியலாளர்கள் உள்ளே செல்ல அனுமதிக்கப்படவில்லை. எதிர்த்தரப்பினரும் செல்லவில்லை. பின்னர் பாதீடு நிறைவேற்றப்பட்டது எனத் தகவல் கூறப்பட்டது.

இதன்போது இடம்பெற்ற கலவரத்தில் சிக்குண்டு சபையின் எதிரணியைச் சேர்ந்த திருமதி.பி.லட்சுமி, எம்.எல்.நபீரா ஆகிய 2 பெண் உறுப்பினர்கள் உடல் உபாதைகளுக்குட்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். சம்பவம் தொடர்பாக ஒருவருக்கொருவர் மாறி மாறி குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் வாழைச் சேனை வைத்தியசாலைக்கு நேரில் சென்று பாதிக்கப்பட்டவர்களைப் பார்வையிட்டு ஆறுதல் தெரிவித்தார். இதேவேளை, தங்களுக்கு அநீதி விளைவிக்கப்பட்டது எனத் தெரிவித்து எதிர்த்தரப்பு உறுப்பினர்கள் நேற்றைய சம்பவம் தொடர்பான முறைப்பாட்டை வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளனர்.

கடந்த 30ஆம் திகதி கூடவிருந்த சபை அமர்வு கொரோனாவைக் காரணம் காட்டி தவிசாளரினால் ஒத்திவைக்கப்பட்டது. பின்னர் 8 ஆம் திகதி கூடவிருந்த சபை அமர்வில் தவிசாளருக்கும் உப தவிசாளருக்கும் இடையில் இடம்பெற்ற அசம்பாவிதம் தொடர்பாக தவிசாளர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டும் உப தவிசாளரும் சபை உறுப்பினர் ஒருவரும் கைதுசெய்யப்பட்டதையடுத்து சபை அமர்வு ஒத்திவைக்கப்பட்டு மீண்டும் நேற்று கூடியது.

கோறளைப்பற்று (வாழைச்சேனை) பிரதேச சபையில் அட்டாகாசங்களுக்கு மத்தியில் பாதீடு நிறைவேற்றப்பட்டதால் மீண்டும் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியே அதிகாரத்தைப் பெற்றுள்ளது.

## முறையற்ற அபிவிருத்தி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சுட்டிக்காட்டியுள்ளது.

2016ஆம் ஆண்டில் 16 சதவீதமாகக் காணப்பட்ட அடர்ந்த காடுகள், 2030ஆம் ஆண்டளவில் 10 சதவீதம் வரை குறைவடையும் அபாயம் உள்ளது எனவும் குறித்த நிலையம் குறிப்பிட்டுள்ளது.

நிலைபேறான திட்டங்கள் இன்றி மேற்கொள்ளப்பட்ட கொழும்பு - மாத்தறை அதிவேக நெடுஞ்சாலை மற்றும் கொழும்பு - கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலைகளால் முத்துராஜவெல போன்ற இயற்கைக் காடுகள் அழிக்கப்பட்டுள்ளன எனவும், குறித்த பிரதேசங்களில் சூழலியல் ரீதியான பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதிகரித்து வரும் காடழிப்புகளால் 103 ஆறுகளும், அதிகமான குளங்களும் வற்றிப் போகும் அபாயத்தை எதிர்கொண்டுள்ளன எனவும் தெரியவந்துள்ளது.

நாட்டின் வளங்களை அடுத்த சந்ததியினருக்கும் வழங்கக் கூடிய வகையில், நிலைபேறான அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதில் அரசு கவனம் செலுத்த வேண்டும் எனவும் சூழலியல் கற்கைகள் நிலையம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

# கொரோனாவிலிருந்து 570 பேர் குணமடைவு!

கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் சிகிச்சை பெற்று வந்த 570 பேர் குணமடைந்துள்ளனர்.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றில் இருந்து குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 22 ஆயிரத்து 831 ஆக அதிகரித்துள்ளது.

கொரோனா தொற்றுக்குள்ளான மேலும் 7ஆயிரத்து 636 பேர் வைத்தியசாலைகளில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

# 197 இலங்கையர்கள் நாடு வந்தடைந்தனர்!

கொரோனா வைரஸ் தொற்று அச்சுறுத்தல் காரணமாக வெளிநாடுகளில் சிக்கித் தவித்த 197 இலங்கையர்கள் நேற்று (வெள்ளிக்கிழமை) காலை நாட்டை வந்தடைந்துள்ளனர்.

இதற்கமைய ஐக்கிய அரபு ராஜ்ஜியத்தின் டுபாயில் இருந்து 107 பேரும், ஆஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகரில் இருந்து 78 பேரும், ஜப்பானின் நரீட்டா நகரில் இருந்து 12 பேரும் இவ்வாறு கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்கள்.

இவ்வாறு வருகைதந்த அனைவரும் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு, தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர் என விமான நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, வெளிநாடுகளில் இருந்து திரும்பும் இலங்கையர்களுக்கு கட்டாய தனிமைப் படுத்தப்பட்ட செயன்முறையை 28 முதல் 14 நாள்களில் குறைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான உத்தியோகபூர்வ அறிக்கை நேற்று, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் வெளியிடப்படும் என கொவிட் -19 தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவர் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

மேலும், புதிய முறையின் கீழ், வெளிநாட்டிலிருந்து வரும் ஓர் இலங்கையர் கட்டாயமாக 14 நாள்கள் தனிமைப்படுத்தப்பட்ட செயல்முறைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்றும் அதன் முடிவில் பி.சி.ஆர். பரிசோதனைகள் நடத்தப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

# மாகாணசபைத் தேர்தலை விரைவில் நடத்தப் பணிப்பு!

## பிரதமர் மஹிந்த விடுத்தார்



கொழும்பு, டிசெ.12

மாகாண சபைத் தேர்தலை விரைவில் நடத்துவது தொடர்பில் கவனம் செலுத்தி, அதற்கான சட்ட நடவடிக்கைகள் தொடர்பாக ஆராயுமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கு அறிவுறுத்தினார்.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கும் பிரதமருக்கும் இடையே நேற்று (வெள்ளிக்கிழமை) முற்பகல், விஜேராமவிலுள்ள பிரதமரின் உத்தியோகப்பூர்வ இல்லத்தில் இடம்பெற்ற சந்திப்பின்போதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

பழைய அல்லது புதிய முறைக்கு அமைவாக தேர்தலை நடத்துவதற்கான சந்தர்ப்பம் தொடர்பாகவும் ஆராயுமாறும் பிரதமர், தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களிடம் தெரிவித்தார். அதன் காரணமாக இம்முறை மாகாண சபை தேர்தலை பழைய முறைக்கு அமைய நடத்தி, எதிர்காலத்தில் தேவையான சட்டங்கள் உருவாக்கப்பட்டதன் பின்னர், புதிய முறையின் கீழ் தேர்தலை நடத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்வது எளிதாக அமையும் என அவர்கள் சுட்டிக்காட்டினர்.

அதற்குப் பதிலளித்த பிரதமர், ஏற்கனவே அது தொடர்பில் சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்துள்ளார் எனவும் குறிப்பிட்டார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி நிமல் ஜீ.புஞ்சிஹேவா உள்ளிட்ட ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் மற்றும் பிரதமரின் மேலதிக செயலாளர் சமிந்த குலரத்ன உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை
யாழ்நகரில் இயங்கும் நிறுவனத்திற்கு பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை.
தொடர்புகளுக்கு:-
077 307 8799







கல்யாணமாலை
வட சர்வதேச
திருமண சேவை

| மணமகன் விவரம் | மணமகள் விவரம் |
| --- | --- |
| பிறந்த திகதி - 1977.07.02 | பிறந்த திகதி - 1989.12.03 |
| மதம் - இந்து V | மதம் - இந்து V |
| நட்சத்திரம் - பூராடம் | நட்சத்திரம் - உத்தரம் |
| செவ் - 02இல் | பாவம் - 28 3/4 |
| பாவம் - 33 1/2 | செவ் - 01இல் |
| கல்வி - A/L | கல்வி - BCom பட்டதாரி |
| தொழில் - சுவிஸ் DoctorPR | தொழில் - வங்கி அதிகாரி |
| எதிர்பார்ப்பு - படித்த பெண் | எதிர்பார்ப்பு - அரச உத்தியோகம் |

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப் படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300.

க.இல - 8000661351 வர்த்தக வங்கி, பருத்தித்துறை.

உப அலுவலகம்,
சந்தை வீதி,
இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி.

077 3434 415
077 8578 528

All inclusive for "Night Color Vision"




இரவை வர்ணமயமாக்குவோம் - சன்சக்தி

இரவையும் வர்ணமயமாக்கும் 4 கமராக்களைக் கொண்ட முழுமைப்படுத்தப்பட்ட தொகுப்பு

80,750/=

விலைக்கழிவு 5,750/=

75,000/=

இத் தொகையில் இங்கு குறிப்பிட்டுள்ள கண்காணிப்பு கருவி தொகுப்பை நிறுவுவதற்கு தேவையான அனைத்து பொருள், தொழிலாளர் கட்டணங்கள் மற்றும் போக்குவரத்து செலவுகள் ஆகியவை அடங்கும்!

Content list (2mpColorPac)
1) 2* Outdoor Camera DS-2CE10D3T-F 2MP
2) 2* Outdoor Camera DS-2CE10D8T-F 2MP
3) 1* DVR 4Channel DS-7104HGHI-F1
4) 1*POWERSUPPLY 12V 10Amp
5) 1* 1TB SURVIELANCE HARDDISK
6) 60m 3C2V /TT WIRE
7) DVR Cabin 3U
8) 1.5m HDMI cable
9) 1.5m Cat6 cable
10) 8* BNC connector
11) 4* DC Jack
12) Fitting Materials
13) Handboook (Sunsakthy)
14) Installation and setup
15) Setup Mobile views

2 YEAR WARRANTY

Just call now
021 221 7994
077 552 7099
facebook.com/sst.sunsakthy

SST சன்சக்தி ரேடர்ஸ் பிறைவேற் லிமிட்டட்
# 395, கண்டி (ஏ9) வீதி, மாம்பழம் சந்தி, யாழ்ப்பாணம்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 12.12.2020 இல் வெளியிடப்பெற்றது.